# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 397

சனி, 27 ஜூன், 2026 |

பக்கங்கள் 17

www.ilakku.org
















# பயங்கரவாதத் தடைச் சட்டம் இவ்வருடத்துக்குள் நீக்கப்படும் : ஜனாதிபதி அறிவிப்பு



இலங்கையில் நீண்டகாலமாகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த வருடத்துக்குள் நீக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் கடந்த 25ம் திகதி உரையாற்றுகையில் அறிவித்தார். இதற்குரிய முதற்கட்ட மற்றும் சட்டரீதியான ஏற்பாடுகளை நீதி அமைச்சு தற்போது மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர் சபையில் வெளிப்படுத்தினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது: “எமது நாட்டின் வரலாற்றில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி, சிவில் சமூக அமைப்புகளும் பொதுமக்களும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். நீண்டகாலமாகவே இந்த நியாயமான கோரிக்கை பல்வேறு தரப்பினராலும் எமக்கு விடுக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் இந்த நீண்டகாலக் கோரிக்கைக்கு மதிப்பளித்து, இந்த வருடத்துக்குள்ளேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு எமது அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான சட்டமூல வரைவுகள் மற்றும் மாற்று ஏற்பாடுகளை நீதி அமைச்சு தற்போது உத்தியோகபூர்வமாகத் தயாரித்து வருகின்றது.

தொடர்ச்சி: பக்கம் 15

## ஹெய்ட்டிக்கு இலங்கை இராணுவம் வேண்டாம்: மனித உரிமை அமைப்புகள்



இலங்கையினால் ஹெய்ட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் சுமார் 900 இராணுவ வீரர்கள் மற்றும் 140 காவல்துறையினரை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பரிசீலிப்பதற்கான நம்பகமான, சுயாதீனமான செயன்முறை எதுவும் இல்லை என்றும் 14 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை, ஹெய்ட்டி அரசாங்கம் மற்றும் குண்டர் ஒழிப்புப் படை என்பவற்றுக்கு அனுப்பிவைத்துள்ள கூட்டறிக்கையில், கடந்தகால மீறல்கள் தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மதிப்பீடு என்பது பெரும்பாலும்

தொடர்ச்சி: பக்கம் 13

## மலையக மக்களுக்கான காணி விடுவிப்பு குறித்து விசேட கவனம்




இந்திய நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள 4700 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடல், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தியின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்தின் கீழ், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால், அனர்த்த அபாயம் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கு 2026 வீடுகள் வழங்கப்படவுள்ளதுடன், ஏனைய வீடுகள் அடையாளம் காணப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதன்படி, 22 பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் அரச பெருந்தோட்டக்

தொடர்ச்சி: பக்கம் 13

# வெனிசுலாவில் இரட்டை நில நடுக்கம் - பல ஆயிரம் பேர் பலி?




கடந்த புதன்கிழமை(24) வெனிசுலாவில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் (ரிக்டர் அளவில் 7.2 மற்றும் 7.5) ஏற்பட்டன. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 920 ஆக அதிகரித்துள்ளதோடு காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 3000 -தை எட்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கராகஸ் மற்றும் லா குவைரா ஆகிய இடங்களில் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன; உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச மீட்புக் குழுக்கள் அங்கு சென்றுள்ளன.

“இப்பேரிடர் பரவலான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம் என்றும், 10,000 முதல் 1,00,000 பேர் வரை உயிரிழந்திருக்கக்கூடும்” என்றும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. ஒரே நாளில் பூமி நான்கு குறிப்பிடத்தக்க நிலநடுக்கங்களைச் சந்தித்துள்ளது. முதலாவதாக, கலிபோர்னியாவின் ரெட்வுட் பள்ளத்தாக்கில் 5.6 ரிக்டர் அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 7 மணி நேரம் கழித்து, வடக்கு வெனிசுலாவில் பேரழிவை ஏற்படுத்திய “இரட்டை” நிலநடுக்கங்கள் நிகழ்ந்தன; இதில் முதலாவது 7.2 ரிக்டர் அளவையும், அதைத் தொடர்ந்து வெறும் 39 வினாடிகளுக்குப் பிறகு ஏற்பட்ட இரண்டாவது நிலநடுக்கம் 7.5 ரிக்டர் அளவையும் கொண்டிருந்தன.

இறுதியாக, வெனிசுலாவில் ஏற்பட்ட அந்த இரட்டை நிலநடுக்கங்களுக்குப் பிறகு வெறும் 25 நிமிடங்களில், ஜப்பானின் குஜி (Kuji) கடற்கரைப் பகுதியில் 6.9 ரிக்டர் அளவுள்ள கடல்சார் நிலநடுக்கம் ஏற்பட்டது. இவ்வளவு குறுகிய காலத்தில் உலகம் முழுவதும் இத்தகைய நில அதிர்வுச் செயல்பாடுகள் நிகழ்வது மிகவும் அரிதான ஒன்றாகும்.

சமீபத்தில் பூமியில் தீவிர நில அதிர்வு நடவடிக்கைகள் பதிவாகியுள்ளன. ‘பசிபிக் நெருப்பு வளையம்’ (Pacific Ring of Fire) எனப்படும் பரந்த நிலத்தட்டுப் பகுதியில் மிதமான மற்றும் அதிக தீவிரத்தன்மை கொண்ட குறைந்தது ஐந்து நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ள நிலையில், வெனிசுலாவில் 7.2 மற்றும் 7.5 ஆகிய தீவிரத்தன்மை கொண்ட இரண்டு நிலநடுக்கங்கள் வெறும் 39 வினாடி இடைவெளியில் அடுத்தடுத்து

## 20,000 பாலஸ்தீனக் குழந்தைகளை கொன்ற இஸ்ரேலியப் படைகள்



காசா மற்றும் மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனக் குழந்தைகளை இஸ்ரேலியப் படைகள் திட்டமிட்டு குறிவைத்து கொன்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கை தெரிவிக்கிறது; இந்தத் தாக்குதல்கள் போர்க்குற்றங்களுக்குச் சமமானவை என்றும், இனப்படுகொலை நோக்கத்தைக் கொண்டிருப்பதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகள் மற்றும் இஸ்ரேல் தொடர்பான ஐ.நா. வின் சுயாதீன சர்வதேச விசாரணை ஆணையத்தின் தலைவரான சீனிவாசன் முரளிதர், செவ்வாய்க்கிழமையன்று(23) தகவல்களை தெரிவித்துள்ளார்..

ஆணையத்தின் தகவலின்படி, அக்டோபர் 2023 மற்றும் அக்டோபர் 2025க்கு இடைப்பட்ட காலத்தில் இஸ்ரேலியப் படைகள் 20,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனக் குழந்தைகளைக் கொன்றன மற்றும் 44,000-க்கும் மேற்பட்டோரைக் காயப்படுத்தின. பிப்ரவரி 2026-க்குள் காசாவில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 21,289 ஆகவும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 44,500 ஆகவும் உயர்ந்ததாக யுனிசெஃப் (UNICEF) அமைப்பின் ஆய்வுகளும் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி: பக்கம் 14

## சூப்பர் கம்ப்யூட்டிங்கில் உலக மகுடத்தை சீனா கைப்பற்றியது



ஜெர்மனியின் ஹாம்பர்க்கில் நடைபெற்ற சர்வதேச சூப்பர் கம்ப்யூட்டிங் மாநாட்டில், சீனாவின் லைன்ஷைன், அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட எல் கேபிடனை விஞ்சி, உலகின் அதிவேக சூப்பர்கம்ப்யூட்டராக அறிவிக்கப்பட்டுள் ளது. உலகின் மிகவும் சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்களின் முதல் 500 தரவரிசையில், 2017-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு சீன இயந்திரம் முதலிடம் பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.

சூப்பர்கம்ப்யூட்டர்கள், காலநிலை மாதிரியாக்கம் மற்றும் மனித மூளை உருவகப்படுத்துதல் முதல் குறியாக்கவியல் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி வரையிலான

தொடர்ச்சி: பக்கம் 13

## மூன்றாவது நாடு ஐசிசியிலிருந்து விலகியது




நவ-காலனித்துவ” (neo-colonialist) சார்பு நிலை கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து (ICC) வெளியேற முடிவெடுத்த சில மாதங்களுக்குப் பிறகு, நைஜர் அதற்கான அதிகாரப்பூர்வ நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

ICC நிறுவப்பட்டதற்கான அடிப்படையான ‘ரோம் ஒப்பந்தத்திலிருந்து’ (Rome Statute) வெளியேறுவதற்கான கடிதத்தை, மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜர் திங்களன்று ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

“அமைதி மற்றும் நீதியை விரும்பும் மக்களிடையே இந்த நீதிமன்றம் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தாலும், அது தவறாகப் பயன்படுத்தப்பட்டு சுரண்டப்பட்டுள்ளது” என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஏபி (AP) செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 15

# தியாக தீபம் திலீபன் நினைவு நாளில் இசை நிகழ்ச்சி: இளையராஜாவுக்கு எதிர்ப்பு



தியாக தீபம் திலீபன் நினைவு நாளை ஒட்டி இளையராஜாவின் ஆஸ்திரேலியா இசை நிகழ்ச்சியின் திகதியை மாற்ற வலியுறுத்தல்

இசைஞானி இளையராஜா அவர்களின் ஆஸ்திரேலிய இசை நிகழ்ச்சியின் திகதியை மாற்றி அமைக்க வேண்டும் என உலகத் தமிழர்களின் உணர்வுகளை முன்வைத்து வேண்டுகோள் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 2026 செப்டம்பர் 26 அன்று இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நாள் தமிழீழப் போராட்ட வரலாற்றில் முக்கியப் பங்கு வகித்த தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவு நாளாக அனுசரிக்கப்படுவதால், நிகழ்ச்சியின் திகதியை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபன், தமிழர் அரசியல் உரிமைகள் மற்றும் நீதிக்கான கோரிக்கைகளை வலியுறுத்தி 12 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்தவர்.

அவருடைய நினைவு நாள் உலகம் முழுவதும் வாழும் ஈழ தமிழர்களால் உணர்வுபூர்வமாக அனுசரிக்கப்படுவதாக அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர் வரலாற்று நினைவுகளையும் சமூக உணர்வுகளையும் மதிக்கும் வகையில், செப்டம்பர் 26 அன்று நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சியின் திகதியை மாற்றி அமைப்பதை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பரிசீலிக்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கோரிக்கை இசைஞானி இளையராஜா அவர்களின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் கோரிக்கை விடுத்துள்ள தரப்பினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

# செம்மணி மனித புதை குழி விவகாரம்: DNA பரிசோதனைக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெறப்படும்: நீதி அமைச்சர

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்படும் என்புக்கூடுகள் தொடர்பான டி.என்.ஏ (DNA) பரிசோதனைக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின் போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார். “கிருசாந்தி குமாரசுவாமி படுகொலையுடன் மறைக்கப்பட்ட விடயங்களை எமது அரசாங்கம் தான் வெளிப்படுத்தியுள்ளது”.

“கடந்த 25 ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்தவர்கள் எவரும் இந்த விடயங்களை வெளிப்படுத்தவில்லை. உண்மையை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. உண்மையை நாங்கள் வெளிப்படுத்துவோம். எதனையும் மறைக்க வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது” என்று அவர் கூறியுள்ளார்.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து இதுவரை 412 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் 409 எலும்புக்கூடுகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன. விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் இந்த விவகாரம் குறித்து முழுமையான விடயங்களை வெளிப்படுத்த முடியாது.

மருத்துவ பரிசோதனை மற்றும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகவே அகழ்வாராய்ச்சி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடமிருந்து ஒத்துழைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அகழ்வாராய்ச்சி பணிகள் மற்றும் அடையாளப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் என்பன ஒன்றிணைந்து நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்கியுள்ளன.

அதுபோலவே தேசிய மட்டத்தில் அதிகாரிகளுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளன. செம்மணி மனித புதைகுழி விவகாரம்

தொடர்ச்சி: பக்கம் 14

## ஆசிரியர் தலையங்கம் | 27 ஜூன், 2026

# மக்கள் இறைமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமையே இன்றைய உலகின் பிரச்சினைகளின் மூலகாரணி

ஐக்கிய இராச்சியம் 23.06.2016ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்கான மக்களாணையைப் பெற்று பத்தாவது ஆண்டு கடந்த வாரம் 23.06. 2026 ம் நாளில் நிறைவு பெற்றது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலக வேண்டும் என்னும் இம் முடிவுக்கு கொன்சேர்வேடிவ் கட்சியினரும் அதிலிருந்து பிரிந்து தனிக்கட்சி ஆரம்பித்த நைஜல் பரேக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியாவின் வகிபாகம் குறித்த உண்மை நிலையினைத் தங்கள் அரசியல் இலாபத்திற்காகத் திட்டமிட்ட முறையில் திரித்து மக்களிடை பிரித்தானிய தேசிய உணர்ச்சியை எழவைத்ததின் விளைவு எனவும் இதனால் ஐக்கிய இராச்சியத்தின் அரச உறுதித்தன்மை பலமாகப் பாதிக்கப்படும். எனவும் உலக அரசியல் ஆய்வாளர்களின் அக்கால எதிர்வு கூறலாக இருந்தது. அரசியலில் உணர்ச்சி அடையாளப்படுத்தலுக்கு அவசியம். ஆனால் இதனையே அரசியலாக்கினால் அது சமகால சமுக பொருளாதார அரசியல் மாற்றங்களை அறிந்து அதற்கேற்ப நாளாந்த வாழ்வை வாழ்வதில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதனை இலக்கு இதன்வழியாக ஈழத்தமிழருக்கும் எடுத்துரைக்க விரும்புகிறது.

பிரிக்ஸிட்டால் பிரித்தானியா அரசியல் உறுதித்தன்மையையும் பொருளாதார பலத்தையும் இழந்து மத்திய சக்தியாகவும் மாறி வருகின்றது என்பதை உறுதி செய்யும் வகையில் கொன்சேர்வேடிவ்கட்சியின் பிரதமர்கள் திரேசா மே 2016 முதல் 2019 வரை, பொறிஸ் ஜோண்சன் 2019 முதல் 2022 வரை, எலிசபேத் ருஸ் 2022 இலும், ரிசி சுனக் 2022 முதல் 2024 என ஐவரும் 2024.ல் கொன்சேர்வேடிவ்கட்சியின் 14 ஆண்டுகால ஆட்சியை 411 பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிபலத்துடன் முடிவுக்குக் கொண்டு வந்த லேபர் கட்சியின் பிரதமர் கெயர் ஸ்ராமர் 2026 வரையுமென ஆறு ஆற்றலும் அரசியல் அனுபவமும் ராஜதந்திரமும் உள்ள பிரதமர்கள் குறித்த காலம் முடியும் வரை பதவி வகிக்காது விட்டு விலகி இன்று 7 வது பிரதமருக்கான வேட்பு மனுவை லேபர் கட்சியில் வடக்கின் அரசன் என அவரது அரசியலாற்றலுக்காக வர்ணிக்கப்பட்டு வரும் அன்ரி பேனம் தாக்கல் செய்யவுள்ளார்.

இவர் பெரும்பாலும் போட்டியின்றி அல்லது யாராவது போட்டியிட்டாலும் இவரை வெல்ல இயலாதென்ற நிலையில் ஐக்கிய இராச்சியத்தின் 7 வது பிரதமராகப் பதவியேற்பார் என்பதால் தற்போதைய பிரதமர் கெயர் ஸ்ராமர் இலகுவான முறையில் அவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்கக் கூடிய முறையில் அவரை 10 டவுனிங் ஸ்ரீட்டுக்கே அழைத்து அதிகார கைமாறுதலுக்கான நேரடி வேலைகளையே கடந்த வாரத்தில் முன்னெடுக்கத் தொடங்கிவிட்டார். ஆயினும் உலகின் பாராளுமன்றங்களின் தாய் என் புகழ்பெற்ற வெஸ்ட மினிஸ்ரர் பாராளுமன்ற 300 ஆண்டுகால வரலாற்றை ஆய்வு செய்தவரான அந்தனி செல்டன் (Anthony Seldon) நடைமுறைப்படுத்த இயலாத அலுவலகம் (The Impossible office) என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிட்ட 17ம் நூற் றாண்டில் 1760 -1770 களிலும் 18ம் நூற்றாண்டில் 1827 – 1837 க்கும் இடையில் இருந்தது போன்ற இயலாத்தன்மை தற்போது ஐக்கிய இராச்சிய பிரதமர் அலுவலகத்துக்கு ஏற்பட்டு விட்டதா? ஏன் ஆறு ஆண்டுகளில் ஏழு பிரதமர் என்ற நிலையேற்பட்டு எதனையும் உறுதியாகத் தொடர இயலாத உறுதியற்ற அரசாகப் பிரித்தானிய அரசு திகழ்கிறது என்பதே இன்றுள்ள கேள்வி. இதற்கான சுருக்கமான பதில்தான் மக்கள் இறைமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படாத நேரங்களில் எல்லாம் அரசு உறுதியற்றதாகும் என்பதாக உள்ளது. ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் 2009க்குப் பின்னர் கட்நத 17 ஆண்டுகளில் ஈழத்தமிழர்களின் இறைமைக்கு முன்னுரிமை கொடுக்காத அரசியலை முன்னெடுப்பதே இன்றைய ஈழத்தமிழரின் கையாலாகாத அரசியலுக்குக் காரணமாகிறது என்பதை இலக்கு நினைவுறுத்த விரும்புகிறது.

இதே நிலைதான் அமெரிக்காவிலும் கடந்தவாரம் அமெரிக்க செனட் 50க்கு 48 என்ற வாக்களிப்பின் வழி அமெரிக்க அரச அதிபர் டொனால்ட்ட்ரம்ப் அவர்களின் ஈரான் போர் குறித்த முடிவுகளை மட்டுப்படுத்தியுள்ளது. ட்ரம்ப் அவர்களின் கட்சியினர் செனட் வாக்களிப்பு அன்று வராததினால் இந்த நிலை வந்தது என்று அளிக்கப்படும் விளக்கமும் மக்கள் இறைமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படாத பொழுது இத்தகைய நிலைகளே ஏற்படும் என்பதனை மீள் உறுதி செய்கிறது.

இலங்கைத் தீவில் தான் ஈழத்தமிழரின் மக்கள் இறைமைக்கு முன்னரிமை கொடுக்காது மூத்த குடிகளும் இலங்கைத் தீவில் வரலாற்றக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழும் ஈழத்தமிழினத்தை இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இன அழிப்பு மூலம் அவர்களின் இறைமையை ஒடுக்கி அவர்களின் நிலத்தைக் கடலை தமதாக்கும் அரசியலை தொடங்கி உலகிற்கு இத்தகைய அரசியல் மாற்றத்திற்கு வழிகாட்டினர் என்பது வரலாறு

கடந்த வாரத்தில் கூட இந்நிலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. சிறீலங்காவில் ஈழத்தமிழர்களின் மக்கள் இறைமைக்கு முன்னுரிமையினை பிரித்தானிய காலனித்துவ ஆட்சி விலகிய காலம் முதலாக இன்று வரை கொடுக்காத சிங்களப் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் 1979 முதல் ஈழத்தமிழர்களை ஒடுக்கத் தாங்களே இயற்றி 47 ஆண்டுகாலப் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் இப்பொழுது அவர்களின் மேலும் விரிவுபெற்றவுடன் அதனைக் கண்டிப்பதுடன் அதனை ரத்து செய்ய வேண்டுமெனக் குரல் எழுப்புவதையும் இந்தப் பின்னணியில் தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் சனாதிபதி ஆகியோரிடம் இருந்தும் இந்த வருடத்துள் ரத்து செய்யப்படும் என்னும் பேச்சுக்கள் எழுவதும் கடந்த வார நிகழ்வுகள். ஆயினும் இது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையில் அதற்கு எதிரான சனநாயக எதிர்ப்பு போராட்டங்களை கூட ஒடுக்கும் மக்கள் இறைமைக்கு முன்னுரிமை கொடுக்காத பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக மறு தோற்றம் பெறும் என்பதே ஆய்வாளர்களின் எதிர்வு கூறலாக உள்ளது.

சட்டவாக்கம் சட்ட அமுலாக்கத்தில் மட்டுமல்ல நிர்வாகத்திலும் இன்றும் ஈழத்தமிழரின் மக்கள் இறைமை ஒடுக்கம் தொடர்கிறது. கடந்த வாரத்தில் உள்ளுராட்சி சபைகளுக்குச் சிறிலங்கா அரசியலமைப்பு சட்ட 9வது அட்டவணையில் நிரல் 1இல் மாகாணசபைகளுக்கென ஒதுக்கப்பட்டுப் பகிரப்பட்ட உள்ளூராட்சி அதிகாரங்கள் தொடர்பான விடயங்களளை மத்திய அதிகாரசபையிடமே மீளவும் கொண்டு செல்லும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின். புதிய சுற்றுச் சூழல் சட்டம் அமைந்துள்ளது. இதனை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் கடந்த வாரத்தில் நல்லூர் பிரதேச சபையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் எவ்வாறு வழக்குகளை மத்திய அதிகாரசபை உள்ளூராட்சி மன்றங்கள் மேல் திணித்து அவற்றை நீதிமன்றங்களில் நிறுத்தி அவற்றின் செயல்பாட்டை உருக்குலைக்கலாம் என்பதனை விளக்கி தேசிய மக்கள் சக்தியின் இந்த மத்தியை நோக்கி அதிகாரத்தை மீளவும் குவிக்கும் செயற்பாட்டை அனுமதிக்கக் கூடாது என்பதனைச் சிறப்பான முறையில் விளக்கியுள்ளார்.

மக்கள் இறைமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமை அரசியலில் மட்டுமல்ல இன்றைய உலகின் காலநிலை சீர்கேடுகளுக்கும் மூலகாரணமாகிறது. இலண்டன் கிளைமட் அக்சன் வீக்கின் நிகழ்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் காலநிலை மாற்றம் மற்றும் சக்தி வளப் பாதுகாப்பின்மை ஒன்றோடொன்று தொடர்புடையன என அதனை எதிர்கொள்வதற்கான அழைப்பையும் அவசர அழைப்பாக விடுத்துள்ளார். இதே நேரம் எல் நினோ தாக்கத்தில் இருந்து தப்பிக்கப் பாரம்பரிய விவசாயத்துக்குப் பதிலாக புதிய முறைக்கு மாற வேண்டுமென சிறிலங்காவின் விவசாயப் பணிப்பாளர் நாயகம் முனைவர் துஷரா விக்ரம ஆராய்ச்சியும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புலம்பெயர் ஈழத்தமிழர்கள் 22.05. 1972 முதல் அரசற்ற தேச மக்களாகவுள்ள தங்களின் தாயகமக்களின் உலகக் குரலாக மட்டுமல்ல அவர்களுக்கான சமுக பொருளாதார அரசியல் பாதுகாப்புக்களை உலக மக்களைக் கொண்டு அவர்களின் அரசாங்கங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய வரலாற்றுப் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை மீள் நினைவுபடுத்தும் இலக்கு இவற்றுக்கான எதிர்வினைகளை சனநாயக முறையில் திட்டமிடல் செயலணிகளை உருவாக்குதல் அவற்றுக்கான மதி நிதி வளங்களுக்கு அனைத்துலகிலும் உள்ள ஈழத்தமிழர்களையும் அவர்கள் வாழும் நாடுகளின் வளவாளர்களையும் முதலீட்டாளர்களையும் இணைத்தல் என்கிற செயற்திட்டங்களைச் செய்வதற்கான வலிமை பெற்றாலே ஈழத்தமிழர் தாயக மக்களின் சிறிலங்கா அரசாங்கத்தில் தங்கி வாழும் வாழ்வியல் தன்மைகள் மாறும் என்பதே நடைமுறை உண்மையாகவுள்ளது என்பதை இலக்கு இவ்வாரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**

 © 2026 இலக்கு இணையம்




# இந்தோ-பசுபிக் மூலோபாய பொறிக்குள் சிக்கிய இலங்கை

**விதுரன்**

இலங்கைக்கும் அமெரிக்காவும் இடையில் முட்டி மோதல்கள் நீளுகின்ற விடயத்தினை கடந்தவாரம் வழங்கியிருந்த நிலையில் கடந்த நாட்களில் அமெரிக்கா ஏறக்குறைய இலங்கையை தனது கட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மிகத் தீவிரப்படுத்தியுள்ளமை வெளிப்பட்டுள்ளது.



அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் கட்டளைப் பீடம், கடந்த ஜூன் 16ஆம் திகதி மீண்டும் பழையபடி 'பசுபிக் கட்டளைப் பீடம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட அடுத்த சில தினங்களிலேயே, அதன் வான்படைகளின் தளபதி ஜெனரல் கெவின் சினைடர் மற்றும் தெற்கு, மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் போல் கபூர் ஆகிய இரு முக்கிய உயர் அதிகாரிகள் ஒரே நேரத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயமானது தெற்காசியப் பிராந்திய அரசியல் பரப்பில் மிக ஆழமான புவிசார் விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது.

1947ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ருமனால் உருவாக்கப்பட்ட இக்கட்டளைப்பீடம், உலக வான் மற்றும் கடல் பரப்பின் பெரும் பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன், கிட்டத்தட்ட 3 இலட்சத்து 75 ஆயிரம் படையினரையும் 36 நாடுகளையும் உள்ளடக்கிய பிரம்மாண்டமான இராணுவக் கட்டமைப்பாகும்.

2018ஆம் ஆண்டு அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் ஜிம் மாட்டிஸினால் 'இந்தோ-பசுபிக்' என்று மாற்றப்பட்ட இப்பீடத்தை, தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெட்செத் மீண்டும் 'பசுபிக் கட்டளைப் பீடம்' என்று மாற்றியுள்ளார்.



இலங்கையின் மேற்குப் பகுதியில் இருந்து ஹவாய் வரையிலான இந்தியப் பெருங்கடல் மற்றும் பசுபிக் பெருங்கடல் பிரதேசங்களை உள்ளடக்கிய இந்த இராணுவக் கட்டமைப்பின் வான்படைத் தளபதி ஜெனரல் கெவின் சினைடர் மற்றும் உதவி இராஜாங்கச் செயலர் போல் கபூர் ஆகிய இரு முக்கிய தூண்களின் ஏகநேர வருகையானது தற்செயலானது அல்ல, மாறாக இது இலங்கையைத் தங்களின் பாதுகாப்பு மூலோபாயத்திற்குள் முழுமையாகப் பிணைத்துக் கொள்வதற்காக அமெரிக்கா மிக நுட்பமாகக் கையாண்டு வருமொரு 'மேலிருந்து கீழ் நோக்கிய' பாதுகாப்பு அணுகுமுறையின் வெளிப்பாடாகும். அமெரிக்காவைப் பொறுத்தமட்டில், இலங்கையை வெறும் வர்த்தக அல்லது இராஜதந்திர நட்புறவு மையமாகப் பார்ப்பதை விட, பாதுகாப்பு ரீதியான ஒரு முக்கியமான இராணுவக் கேந்திரமாகவே கையாண்டு வருகிறது.

1980களில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில், திருகோணமலையில் அமெரிக்கா தனது படைத் தளத்தை அமைக்கக்கூடும் என்ற ஊகங்களின் அடிப்படையிலேயே இந்தியா இலங்கைக்குள் நேரடியாகத் தலையிட்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் கொண்டுவந்தது.



ஆனால், அப்போது அமெரிக்காவிற்கு அத்தகைய எண்ணம் இருக்கவில்லை என்பது பின்னரே உறுதியானது. எனினும்,தற்போது சர்வதேசச் சூழல் முற்றிலும் மாறியுள்ளது. இந்தியாவும் அமெரிக்காவும் நெருங்கிய மூலோபாயப் பங்காளிகளாக மாறியுள்ள தற்போதைய புவிசார் அரசியல் சூழலில், இந்தியப் பெருங்கடலின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் சீனாவின் அசுர வளர்ச்சியை முறியடிப்பதற்கும் இலங்கையைத் தன்வசப்படுத்துவதில் அமெரிக்கா தீவிரமாக இயங்கி வருகிறது.

கடந்த மாதம் கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்காவால் வழங்கப்பட்ட 10 மில்லியன் டொலர்கள் பெறுமதியான 'சமுத்திரவிஜய' கப்பல் இலங்கை கடற்படையில் இணைக்கப்பட்டபோது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதுவர் செர்ஜியோ கோர் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டும் அவர் வரவில்லை.

இது இரு நாட்டு உறவுகளுக்குள் ஏதோ ஒரு நெருடல் நிலவுகிறதோ என்ற ஊகங்களை சர்வதேச மட்டத்தில் தோற்றுவித்த நிலையில், அந்த ஊகங்களை முற்றிலும் உடைத்தெறியும் நோக்குடனேயே, இராணுவத் தரப்பிலிருந்து ஜெனரல் கெவின் சினைடரும்,இராஜதந்திரத் தரப்பிலிருந்து போல் கபூரும் ஒரே நேரத்தில் இலங்கையில் தரையிறங்கித் தங்களின் பலத்தைக் காட்டியுள்ளனர்.



அமெரிக்காவின் இந்த அணுகுமுறையானது ஒரே நாளில் நிகழ்ந்ததொன்றல்ல, மாறாக இது மிக நிதானமாகத் திட்டமிடப்பட்டு, ஒரு வலுவான பாதுகாப்பு வலையமைப்பாகத் திரைமறைவில் உருவாக்கப்பட்டு வருகிறது.

2016ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், பசுபிக் கட்டளைப் பீடத்தின் அன்றைய தளபதி அட்மிரல் ஹரி ஹாரிஸின் இலங்கை விஜயத்துடன் இதற்கான உத்தியோகபூர்வ அடித்தளம் இடப்பட்டது.




இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், சர்வதேச அரங்கிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கை படையினருக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டுகளும் மனித உரிமை மீறல் விவாதங்களும் தீவிரமாக எழுந்தபோது, அமெரிக்கா இலங்கையுடனான தனது பாதுகாப்பு ஒத்துழைப்பைக் குறைத்துக்கொண்டது.

ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள புவிசார் அரசியல் மாற்றங்களால், அமெரிக்கா தனது கொள்கைகளைத் தளர்த்தி, இலங்கை முப்படைகளுடனும் உயர்ந்தபட்ச நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிப்படையான உயர்மட்ட இராஜதந்திரப் பயணங்களைத் தாண்டி, கட்டளையிடும் அதிகாரமற்ற கீழ்நிலை அதிகாரிகள் மட்டத்திலும் தொடர்புகள் பேணப்பட்டு, கூட்டுப் பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் ஒரு வலுவான பாதுகாப்பு வலையமைப்பு திரைமறைவில் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு அங்கமாகவே, ரத்மலானை விமானப்படைத் தளத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில், அமெரிக்க அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட ரி.எச்-57 'சீ ரேஞ்சர்' ரக 10 பல்பயன்பாட்டு ஹெலிகொப்டர்களை உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு கூட்டுப் பிரகடனமாக அரங்கேறியது.



இலங்கையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்கா கையாளும் முதன்மையான தந்திரோபாயம் 'மூலோபாயக் கொடைகள்' என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

தொடர்ச்சி: பக்கம் 14




பா.அரியநேத்திரன்

1949, டிசம்பர்,18, தொடக்கம் 1976,மே,14, வரையும் தந்தை செல்வா, இலங்கை தமிழரசுக்கட்சி கொள்கை சமஷ்டி கொள்கைதான்!

1976, மே,14, தொடக்கம் 1977, ஏப்ரல்,26, வரை தந்தை செல்வா இறக்கும்வரை தந்தை செல்வாவின் கொள்கை இலங்கை தமிழரசுக்கட்சி கொள்கை வட்டுக்கோட்டை தீர்மானம். அதுவே தந்தை செல்வா மரணித்த பின்னரும் 1977, யூலை 21, ல் மக்கள் ஆணை பெற்று இன்றுவரை 50, ஆண்டுகளாக இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியும், ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளும் கடைப்பிடித்து வரும் கொள் கையாகும். இதுவரை அந்த கொள்கையை எந்த கட்சிகளும் மீளப்பெறவில்லை.



வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி வட்டுக்கோட்டை பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் இடம் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநாட்டில் நிறை வேற்றப்பட்டது. 1972 ஆம் ஆண்டு திருகோணமலையில் உருவாக்கப்பட்ட தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டமையும் இந்த மாநாட்டிலேயே இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 வது வருட நினைவு நிகழ்வுகள் வடக்கு,கிழக்கு எங்கும் நிகழ்த்தப் பட்டன. இதன் இறுதி நிகழ்வு “வட்டுக்கோட்டை 50 எழுச்சிமாநாடு” என்ற தலைப்பில் கடந்த 20/06/2026, சனிக் கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடாத் தப்பட்டது.

பல்வேறு சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும், மதத்தலைவர்களும் வட்டுக்கோட்டைத் தீரமானம் பற்றிய தங்கள் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். வடக்கு கிழக்கு எட்டுமாவட்டங்களில் இருந்தும் பெரும் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்




வட்டுக்கோட்டை தீர்மானம் ஒரு அரசியல் ஆவ ணம் மட்டுமல்ல, இது ஒரு தேசிய இனத்தின் அரசியல் உணர்வின் வெளிப்பாடு. தலைமுறைகளின் தியாகங்க ளால் வடிவமைக்கப்பட்ட ஒரு தேசியப் பிரகடனம் என வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாட்டு உரையில் அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான அருட்பணி க. ஜெகதாஸ் அடிகளார் தொடக்க உரையில் குறிப்பிடப்பட்டார்.

பல தசாப்தங்களாக தமிழர்கள் சமத்துவம், மொழி உரிமை, கல்வி உரிமை, நில உரிமை மற்றும் அரசியல் பங்குபற்றலுக்காக ஜனநாயக வழிகளில் போராடினர். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர்கள் எதிர்கொண்டது மறுப்பையும் ஒடுக்குமுறையையும், சிங்கள ஏகாதிபத்தியத்தின் வன்முறையையும்தான் வட்டுக் கோட்டைத் தீர்மானம் தோன்றுவதற்கு காரண மாக அமைந்தது என வட்டுக்கோட்டை 50, விழா ஒருங்கி ணைப்பாளர் தலைவர் தவத்திரு வேலன் சுவாமி நிறைவுரையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை தீர்மானம் பற்றி பேசுவதிலோ, அந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலிலோ சட்டரீதியி லான எந்தத்தடைகளும் இல்லை என தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் செயற்குழு உறுப்பினரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன் இடை உரையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை தீர்மானமானத்தின் தந்தை இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் நிறுவுனர் தலைவரான தந்தை செல்வாவா என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். அவர் தமிழர் விடுதலை கூட்டணி என்ற அரசியல் கட்சி ஊடாக தன்னால் முன்மொழியப்பட்டு தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான மூ. சிவசிதம்பரம் அவர்களால் வழிமொழியப்பட்டபிரகடனமே வட்டுக்கோட்டை தீர்மானமாகும்.



வட்டுக்கோட்டை தீர்மானம் 50, ஆண்டுகள் கடந்தும் அந்த தீர்மானம் இதுவரை எந்த ஒரு தமிழ்தேசிய கட்சியாலும் மீளப்பெறாத வடகிழக்கு தமிழ் மக்களின் ஆணை பெற்ற தீர்மானமாக கருதப்படுகிறது இந்த தீர்மானத்தின் முக்கிய பங்கு இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியினுடையது என்பது யாவரும் அறிந்த ஒன்று. வட்டுக்கோட்டை தீர்மானம் எடுக்கும் போது இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் யாவரும் தமிழர் விடுதலை கூட்டணியில் உறுப்பினர்களாகவே கருதப்பட்டனர் அதனால் தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் தந்தை செல்வா, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் தலைவர் ஜீ ஜீ பொன்னம்பலம், இலங்கை தொழிலாளர் காங்கிரஷ் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆகியோர் இணைந்து வட்டுக்கோட்டை தீர்மானம் 1976,மே,14, வெள்ளிக்கிழமை எடுத்ததனர் என்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமாகும். அந்த தீர்மானம் எடுத்து ஆறு மாதங்களுக்கு பின்னர் 1976, நவம்பர்,19, வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் தந்தை செல்வா அந்த தீர்மானம் தொடர்பாக உரை ஆற்றியிருந்தார் இதுவே தந்தை செல்வாவின் பாராளுமன்றஇறுதி உரை அந்த உரையானது..

“தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமையை மீட்பதற்காக சமஷ்டி ஆட்சிகோரி ஒரு இயக்கத்தை ஆரம்பித் தோம். சமஷ்டி ஆட்சிமூலம் நமது இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதை இப்போது அறிந்து கொண்டோம். இந்த அனுபவத்தைக்கொண்டே நாங்கள் பிரிந்து செல்ல வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

நாங்கள் பிரிந்து செல்லாவிட்டால் எங்கள் இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்க முடியாது. நாங்கள் கோருவது உண்மையில் பிரிவினை அல்ல இழந்த அரச உடைமையை மீள அமைக்கவே போராடுகின்றோம்” எங்கள் கட்சி ஒரு தனியாட்சியை நிறுவும் நோக்கத்துடன் செயல் பட்டு வருகிறது. இது இலேசான காரியம் இல்லை என்பது எங்களுக்கு தெரியும் இது வில்லங்கமான பாதை என்பதை நாம் உணர்கிறோம்.

ஆனால் நாங்கள் சிங்களவர் ஆட்சியில் இருந்து விடுபட வேண்டும் என்ற சிந்தனையைடனே செயல் பட்டுவருகிறோம் எனவே முழுமூச்சுடன் செயல்பட்டு எமது அரசை அமைப்போம்.

நாங்கள் அயரிஷ் மக்களை போல சுதந்திரமான நாட்டை கோருகிறோம் இதற்கு சிங்களவர் மறுப்பதற்கு எதுவித நியாயமும் இல்லை.ஒருநாள் எங்களின் நியாயமான கோரிக்கைக்கு இணங்கியே தீர வேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்.நாங்கள் ஏனைய பகுதிகளில் இருந்து பிரிந்து எங்கள் தமிழ் நாட்டை அமைத்தே தீருவோம்” இப்படி தந்தை செல்வாவின் பாராளுமன்ற உரை அமைந்திருந்து.

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்குப் பின்னர் அகில இலங்கை தமிழ் காங்கிறஸ் தலைவர் ஜீ ஜீ பொன்னம்பலம் 1977, பெப்பரவரி,09, ல் மரணித்துவிட்டார், தந்தை செல்வா 1977, ஏப்ரல்,26, ல் மரணித்து விட்டார், இருவரும் மரணித்த பின்புதான் நாடாளுமன்ற தேர்தல் 1977, யூலை,21.ல் இடம்பெற்றது அந்த தேர்தலில் வட்டுக்கோட்டை தீர்மானம் மக்கள் ஆணையாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு தமிழர் விடுதலை கூட்டணி வடகிழக்கில் 23, தொகுதிகளில் 24, வேட்பாளர்களை தொகுதிரீதியாக போட்டியிடவைத்து 18, பாராளுமன்ற உறுப்பினர்கள் வெற்றிபெற்று எதிர்கட்சி தலைவராக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் தெரிவானார்.

ஆனால் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு ஆதரவு கொடுத்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மக்கள் ஆணை தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிராக யாழ் குடாநாட்டில் அமரத்துவம் அடைந்த ஜீ ஜீ பொன்னம்பலத்தின் மகன் குமார் பொன்னம்பலம் அகில இலங்கை தமிழ் காங்கீரஸ் தலைமையில் சுயேட்சையாக வேட்பாளர்களை நிறுத்தி தோல்வி கண்டனர்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் மலையக அரசியலில் புவிசார் நிலைமையை கருத்தில் கொண்டு வட்டுக் கோட்டை தீர்மானம் மலையகத்துக்கு ஒவ்வாமை என்பதால் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்னிறுத்தி மலையகத்தில் தேர்தலில் போட்டியிடவில்லை ஆனால் அவர் மலையகத்தில் சேவல் கூவும்போது வடகிழக்கில் சூரியன் உதிக்கும் என்ற பிரசாரத்தை வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு ஆதரவாக முன்னெடுத்தார். சேவல் சின்னம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சின்னம், உதயசூரியன் தமிழர் விடுதலை கூட்டணி சின்னம் என்பதால் அவ்வாறு அவரின் பிரசாரம் மலையக மக்களை தட்டி எழுப்பியது.

முஸ்லிம் தொகுதிகளில் வட்டுக்கோட்டை தீர் மானம் தோல்வி. வடகிழக்கில் கல்முனை தொகுதி ஏ. எம். சம்சுதீன், சம்மாந்துறை தொகுதி, எச். எல். எம். ஹாசீம், மூதூர் தொகுதி,எஸ். எம். மக்கீன், புத்தளம் தொகுதி டாக்டர்

தொடர்ச்சி: பக்கம் 13




# தன்னாட்சிக்கு உள்ளூராட்சி மன்றங்கள் துணையாயிருக்க வேண்டும்!

தீபச்செல்வன்

ஈழத் தமிழ் மக்கள் தமது சுய நிர்ணய உரிமைக்காக பல தியாகங்களை ஈழ மண்ணில் செய்திருக்கிறார்கள். மிக நீண்ட நெடிய போராட்டத்தை ஈழ மண்ணில் நடாத்தியுள்ளனர். சுமார் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மாவீரர்கள் தமது இன்னுயிர்களை ஈழ மண்ணின் விடுதலைக்காக தியாகம் செய்துள்ளனர். எனவே அந்த அறத்துடன் வாழ வேண்டிய பொறுப்பு ஈழத் தமிழ் மக்களுக்கு உள்ளது. வடக்கு கிழக்கின் நிர்வாக அலகிற்காக ஈழத் தமிழ் மக்கள் இன்றும் அறவழியில் போராடி வருகிறார்கள். இந்த நிலையில் வடக்கு கிழக்கின் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் தமிழர்களின் வசமுள்ளன. அவற்றை நிர்வாகத்திறனுடன் நிர்வகிப்பது சுய நிர்ணய உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழ் மக்களின் பயணத்தில் மிகவும் அவசியமானதாகும்.




## வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகள் வசம்

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கிற்கு வெளியில் பெரும்பான்மையைப் பெற்ற நிலையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்ட இலங்கைத் தமிழ் அரசு கட்சி 307,657 வாக்குகளைப் பெற்று 377 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. அத்துடன் தமிழரசுக் கட்சி 37 சபைகளில் முன்னிலை பெற்றுள்ளதுடன் அதில் 03 மாநகர சபைகள், 01 நகர சபை மற்றும் 33 பிரதேச சபைகள் என்பன உள்ளடங்குகின்றன. யாழ் தேர்தல் மாவட்டத்தில் 79 ஆசனங்களைக் கைப்பற்றி இரண்டு சபைகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னிலை பெற்றுள்ளது. அத்துடன் மேலும் சில சபைகள் தமிழ் தரப்பில் இணைவுடன் ஆட்சி அமைந்துள்ளது.




உண்மையில் வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி அதிகார சபைகள் வெறுமனே நிர்வாக அமைப்புகள் அல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும். அவை மக்களின் அன்றாட வாழ்வோடும், சமூக முன்னேற்றத்தோடும், பிரதேசத்தின்பொருளாதாரவளர்ச்சியோடும்,ஒருதேசத்தின் எதிர்காலக் கட்டமைப்போடும் நேரடியாக இணைந்துள்ள அடித்தள ஜனநாயக நிறுவனங்களாகும். ஒரு சமூகத்தின் வளர்ச்சியை அளவிட வேண்டுமெனில் அதன் உள்ளூராட்சி அமைப்புகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதையே முதலில் பார்க்க வேண்டும். அந்த வகையில், வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி சபைகள் தமது அதிகாரங்களையும் வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி மக்களுக்கு திறமையான சேவைகளை வழங்குவது இன்றைய காலத்தில் மீண்டும் கவனிக்க வேண்டிய விடயமாகிறது.



## உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பு

வடக்கு கிழக்கு என்பது நீண்டகாலப் போரின் காயங்களை இன்னமும் சுமந்துகொண்டிருக்கும் பிரதேசமாகும். போரினால் அழிவடைந்த உள்கட்டமைப்பு, இடம்பெயர்வுகள், வறுமை, வேலைவாய்ப்பின்மை, சுற்றுச்சூழல் பாதிப்புகள், கொழும்பில் மையப்படுத்தப்பட்ட ஆட்சியின் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் இந்தப் பிரதேசத்தின் மறுகட்டமைப்பில் உள்ளூராட்சி சபைகளுக்கு மிக முக்கியமான பொறுப்பு இருக்கிறது. மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் முதலில் சந்திப்பது மத்திய அரசை அல்ல. உள்ளூராட்சி நிறுவனங்களைத்தான். எனவே மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வலுப்படுத்துவது இந் நிறுவனங்களின் அவசிய கடமை.



ஒரு பிரதேசத்தின் அடிப்படை வசதிகளைப் பராமரிப்பது உள்ளூராட்சி சபைகளின் முக்கியக் கடமையாகும். கிராம மற்றும் நகர வீதிகளைப் புனரமைத்தல், வடிகால் அமைப்புகளைச் சீரமைத்தல், குடிநீர் வசதிகளை மேம்படுத்தல், வீதி மின்விளக்குகளை பொருத்தல் போன்றவை மக்களின் வாழ்க்கைத் தரத்தை நேரடியாக உயர்த்தும் பணிகளாகும். மழைக்காலங்களில் வெள்ளநீர் தேங்காத சூழலை உருவாக்குவதும், மக்கள் பாதுகாப்பாகப் பயணிக்கக்கூடிய சாலைகளை உருவாக்குவதும் ஒரு வளர்ந்த சமூகத்தின் அடையாளங்களாகும்.




## நிலத்தை அழகாக நிர்வகித்தல்

உலகெங்கிலும் நகரங்களையும் கிராமங்களையும் சுத்தமாக வைத்திருப்பது உள்ளூராட்சி சபைகளின் அடிப்படைப் பொறுப்பாக முன்னெடுக்கப்படுகிறது. கழிவுகளை முறையாகச் சேகரித்தல், மீள்சுழற்சி திட்டங்களை அறிமுகப்படுத்தல், பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தல், மரநடுகை மற்றும் பசுமைத் திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற பணிகள் எதிர்கால சந்ததியினருக்கான ஆரோக்கியமான வாழ்விடத்தை உருவாக்கும். சுத்தமான நகரங்கள் சுற்றுலாவையும் முதலீட்டையும் ஈர்க்கும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய உண்மையாகும்.



வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தில் பொதுச் சந்தைகள் முக்கிய பங்காற்றுகின்றன. விவசாயிகள், மீனவர்கள், சிறு வணிகர்கள் ஆகியோரின் வாழ்வாதாரம் பெருமளவில் உள்ளூர் சந்தைகளைச் சார்ந்துள்ளது. இந்தச் சந்தைகளைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பராமரிப்பதும், தேவையான வசதிகளை ஏற்படுத்துவதும் உள்ளூராட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். சந்தைகள் மக்களின் பொருளாதார இயக்கத்தின் இதயமாக இருக்க வேண்டும்; நிர்வாகக் குறைபாடுகளின் சின்னமாக அல்ல.

வியாபார நிறுவனங்களுக்கு உரிய அனுமதிகளை வெளிப்படையாக வழங்குதல், சுகாதாரத் தரங்களைப் பேணுதல், சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோரை

தொடர்ச்சி: பக்கம் 15

# ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலால் வடக்கில் எழுந்துள்ள ஜனநாயக நெருக்கடி




## விதுரன்

வடக்கு மாகாண அரசியல் சூழல், அண்மைய நாட்களாக மாகாண ஆளுநரின் தன்னிச்சையான அதிகாரப் பிரயோகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் இறையாண்மை மீதான அத்துமீறல்கள் காரணமாகப் பெரும் கொந்தளிப்பான நிலையை அடைந்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகத்தினால் 19-06-2026அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் இரண்டு நாட்டின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அரசியல் வரலாற்றில் மிக மோசமானதொரு முன்னுதாரணத்தைத் அம்பலப் படுத்தியுள்ளது.



வவுனியா மாநகர சபையின் மேயர் திரு. சுந்தரலிங்கம் காண்டீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபையின் உபதவிசாளர் திரு. ஞானப்பிரகாசம் கிஷோர் ஆகியோரை அவர்களின் பதவிகளிலிருந்து நீக்கியது மட்டுமன்றி, மக்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படைச்சபை உறுப்புரிமையையும் வறிதாக்கும் வகையில் வர்த்தமானி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதியரசர் கந்தையா அரியநாயகம் தலைமையிலான தனியொருவர் கொண்ட விசாரணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டே ஆளுநர் இந்த அதிரடித் தீர்மானத்தை எடுத்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாநகர சபை தொடர்பான தீர்மானம் சாவகச்சேரி நகர சபை தொடர்பான தீர்மானம் ஆகியன கோப்புக்களில் உள்வாங்கப்பட்டு சட்டபூர்வமானவையாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த நடவடிகையானது மக்கள் வழங்கிய ஜனநாயக ஆணையை அப்பட்டமாகத் துஷ்பிரயோகம் செய்யும் செயலாகவும், நீதிமன்றக் கட்டமைப்பிற்கு அப்பால் நிர்வாக அதிகாரம் கொண்ட நபரால் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகப் படுகொலையாகவுமே பார்க்க வேண்டியுள்ளது.



இந்த விவகாரத்தின் பின்னணியில் உள்ள குற்றச்சாட்டுகளையும் அதற்கான தர்க்கங்களையும் ஆராயும்போது, ஆளுநரின் வர்த்தமானி அறிவிப்பு எவ்வளவு தூரம் பலவீனமான மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டது என்பது மிகத் தெளிவாகப் புலனாகிறது.

முதலாவதாக, வவுனியா மாநகர சபை மேயர் காண்டீபன் அவர்கள் மீது ஏதோவொரு ஊழல் குற்றச்சாட்டு முதன்மைப்படுத்தப்பட்டு, அதன் மூலமே அவர் பதவியிழந்ததாகக் கூறப்பட்டது. ஆனால், வவுனியா மாநகர சபையில் அவர் ஆட்சியமைத்து வெறும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள்ளேயே, அவர் பாரிய ஊழலில் ஈடுபட்டார் என்று கூறி அவரது மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பறிப்பது எந்தவொரு தர்க்கரீதியான அறிவுக்கும் எட்டாத முட்டாள்தனமான விடயமாகும்.

மிகக் குறுகிய காலத்திற்குள் ஒரு சபையின் நிர்வாகக் கட்டமைப்பைக் கூட முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், இத்தகைய பாரதூரமான குற்றச்சாட்டை அவர் மீது சுமத்துவது அரசியல் பழிவாங்கல் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

அதுதட்டுமன்றி, குறித்த விடயம் சம்பந்தமான வழக்கில் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் இறுதி அறிவிப்பின் பிரகாரம் காண்டீபன் மேயர் பதவியை தொடர்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றக் கட்டளைக்கு அப்பால் சென்று ஆளுநர் தீர்மானம் எடுப்பது எந்தவகையில் நியாயமானதாகும்.



மறுபுறம், சாவகச்சேரி நகர சபை உபதவிசாளர் கிஷோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு இன்னும் வேடிக்கையானது. உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு சுற்றுநிருபத்தை அவர் சபை யில் விமர்சித்து, அதனைத் தூக்கி எறிந்தார் அல்லது கிழித்தெறிந்தார் என்பதாகும்.

உள்ளூராட்சி ஆணையாளர் என்பவர் மக்கள் பிரதிநிதி அல்ல, அவர் ஒரு நியமிக்கப்பட்ட அரச அதிகாரி மட்டுமே. அவர் வழங்கும் சுற்றுநிருபங்கள் மாறாத வேத வாக்குகளோ அல்லது விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட புனிதமான ஆவணங்களோ அல்ல.

மக்கள் வழங்கிய அதிகாரத்தின் மூலம் சபையில் அமர்ந்திருக்கும் ஒரு பிரதிநிதிக்கு, மக்கள் நலனுக்குப் புறம்பான அல்லது குறைபாடுகள் நிறைந்த ஒரு சுற்றுநிருபத்தை விமர்சிப்பதற்கும், அதன் மீதான தனது கடுமையான எதிர்ப்பைக் காட்டுவதற்கும் முழுமையான தார்மீக உரிமையுள்ளது.

அத்தகையதொரு ஜனநாயகப் போராட்ட வடிவத்தைக் காரணியாகக் காட்டி, ஒரு மக்கள் பிரதிநிதியின் பதவியையும் சபை உறுப்புரிமையையும் பறிக்கும் அளவுக்கு ஆளுநர் செல்வது என்பது எதேச்சதிகாரத்தின் அதியுச்சக்கட்டமாகும்.

இவ்விடயத்தில் மிக முக்கியமான சட்ட ரீதியானதும் தார்மீக மிக்கத்துமான அடிப்படைக் கேள்விகள் உள்ளன. அதாவது, மக்கள் பிரதிநிதிகள் மீது குற்றச்சாட்டுகள் இருக்கும் பட்சத்தில் அதனைக் கையாள்வதற்கான சரியான வழிமுறை எதுவென்பதாகும்.

இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியின்படி, ஒரு பிரதிநிதி முறைகேடுகளில் ஈடுபட்டால் அல்லது சட்டத்தை மீறினால், அதுகுறித்து தகுந்த சான்றுகளுடன் நீதிமன்றத்தை நாட வேண்டும்.

நீதிமன்றத்தின் முன்னிலையில் இருதரப்பு வாதங்களும் நியாயமாகக் கேட்கப்பட்டு, சுயாதீனமான நீதிபதிகளால் மட்டுமே அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்பட வேண்டும்.

அதை விடுத்து, மாகாண சபைத்தேர்தல்கள் நடத்தப்படாதவொரு சூழலில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மற்றும் ஜனாதிபதியின் முகவராகச் செயற்படும் ஆளுநருக்கு, மக்களின் ஆணையைக் கேள்விக்குள்ளாக்கும் இத்தகைய தனிப்பட்ட அதிகாரங்கள் எவ்வாறு இருக்க முடியும்?

தமக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரப் பின்னணியைத் தவறாகப் பயன்படுத்தி, ஆளுநர் இந்த விடயத்தில் முற்றிலும் தான்தோன்றித்தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் நடந்துகொண்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

ஆளுநர் என்ற பதவி மாகாணத்தின் நலனையும் சட்ட ஒழுங்கையும் பாதுகாப்பதற்கே அன்றி, மக்களின் வாக்குப்பலத்தால் உருவான உள்ளூராட்சி அமைப்புகளைத் தங்களின் விருப்பப்படி கலைப்பதற்கோ அல்லது ஒடுக்குவதற்கோ அல்ல. இந்த நடவடிக்கை முழுக்க முழுக்க சட்டத்தின் ஆட்சிக்கும், இயற்கை நீதியின் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணானதாகும்.




இதன் பின்னணியில் உள்ள அரசியல் சூழ்ச்சிகளை உற்றுநோக்கும்போது, தற்போதைய ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரட்டை வேடமும், அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலும் அம்பலமாகின்றன.

இந்த ஆளுநர் தொடர்ந்து தனது பதவியில் நீடிப்பதற்காக, தற்போதைய ஆளும் தரப்பிற்கு ஆதரவாகவும் அவர்களின் விருப்பத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவும் இவ்வாறான ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறாரா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுவாக எழுந்துள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட காண்டீபன் மற்றும் கிஷோர் ஆகிய இருவரும் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் உறுப்பினர்களாக இருப்பதனால், தமிழ் தேசியக் கட்சிகள் ஆட்சி புரியும் சபைகளைக் குறிவைத்து ஒடுக்குவதற்கும், அவர்களின் ஆட்சியை இல்லாது செய்வதற்கும் திட்டமிட்டே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

தெற்கில் ஜனநாயகம், ஊழல் ஒழிப்பு மற்றும் நல்லாட்சி பற்றி நீண்ட வகுப்பெடுக்கும் ஜனாதிபதி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதற்கு நேர்மாறாகத் தனது முகவர்களாகவும் எடுபிடிகளாகவும் ஆளுநர்களை நியமித்து இத்தகைய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

வடக்கில் நடக்கும் அனைத்து ஜனநாயகப்

தொடர்ச்சி: பக்கம் 13




# புலம்பெயர் மக்கள் தமது முதலீடுகளைச் செய்வதற்கு முன்வர வேண்டும்!

மட்டு.நகரான்

வடகிழக்கில் பொருளாதார ரீதியான மாற்றங்கள் உருவாகவேண்டும். புலம்பெயர்மக்கள் தமது முதலீடுகளை செய்வதற்கு முன்வரவேண்டும்.அதேபோன்று எல்லைப்பகுதி காணிகளை பாதுகாப்பதற்கும் முன்வரவேண்டும். நாங்கள் இழந்த சமூகம் இனியும் இழப்பதற்கு எதுவும் இல்லாத சமூகமாக இருக்காமல் தமது நிலங்களை பாதுகாத்து அதனை எதிர்கால சந்ததிக்கு வழங்கும் வகையிலான திட்டங்கள் தீட்டப்பட்டு முன்னெடுக்கப்படவேண்டும். வடகிழக்கு தமிழர்களின் தாயகப்பகுதியின் எல்லைப்பகுதிகள் பாதுகாக்கப்படவேண்டும். எல்லை பகுதியென்பது பெரும்பாலும் இயற்கையின் அனைத்து வளங்களையும் கொண்ட பகுதியாகவும் பொருளா தாரத் தினை மேம்படுத்துவதற்கான வளமாகவும் கொள்ளப்படும்போது எமது மண் பாதுகாக்கப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.



ஒரு நாட்டின் அல்லது ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் தனித்துவமும் இருப்பும் அதன் எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளன. இலங்கைத் தமிழர்களின் வரலாற்றுப்பூர்வமான பூர்வீக தாயகமாக விளங்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைப் பகுதிகள் இன்று பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. இந்த எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பது என்பது வெறும் நிலப்பரப்பைக் காப்பது மட்டுமல்ல் அது ஒரு இனத்தின் அடையாளம், கலாச்சாரம், மற்றும் எதிர்காலப் பாதுகாப்பினை உறுதி செய்வதாகும்.

வடகிழக்கு எல்லைப் பகுதிகள் இன்று திட்டமிட்ட பலவீனப்படுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றன. அவற்றில் முதன்மையானவை எல்லைக் கிராமங்களை நோக்கிய திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மூலம் தமிழர்களின் பூர்வீக நிலத்தொடர்பு துண்டிக்கப்படும் அபாயம் உள்ளது. மக்கள்தொகை பரம்பல் மாற்றம் எல்லை மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரம் குறைக்கப்பட்டு, அரசியல் பிரதிநிதித்துவங்கள் பலவீனப் படுத்தப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடகிழக்கின் எல்லைப்பகுதிகளில் காணப்படும் தமிழர்களின் பூர்விக வரலாற்று அடையாளங்கள் சிதைக்கப்பட்டு, புதிய அடையாளங்கள் திணிக்கப்படுவதன் மூலம் எல்லைகளின் வரலாற்றுத் தொடர்ச்சி மறுக்கப்படும் நிலைமையினையும் நாங்கள் காண்கின்றோம்.

நிலமே ஒரு இனத்தின் உயிர்நாடி. நிலத்தை இழப்பது என்பது அந்த இனத்தின் வரலாற்றையும் எதிர்காலத்தையும் ஒரே நேரத்தில் இழப்பதற்குச் சமம்."வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் எல்லைக் கிராமங்கள் பாதுகாக்கப்படும் போதுதான், தமிழர்களின் தாயகக் கோட்பாடு சிதையாமல் இருக்கும். எல்லைகளில் மக்கள்தொகைசமநிலைமாறும்போது,நாடாளுமன்றமற்றும் மாகாண சபைக்கான தமிழர்களின் பிரதிநிதித்துவ இடங்கள் பறிபோகும் நிலை ஏற்படும். எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களே அந்த மண்ணின் உண்மையான காவலர்கள். அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டால், ஒட்டுமொத்த வடகிழக்கின் உள்மாவட்டங்களும் பாதுகாப்பு அற்றவையாக மாறும் நிலையேற்படும்.

இந்த நிலைமையானது இன்று வடகிழக்கில் மிக வேகமாக ஏற்பட்டுவருகின்றது.ஏற்கனவே கிழக்கில் திருகோணமலை மாவட்டமும் அம்பாறை மாவட்டமும் மாற்றப்பட்டுள்ள நிலையில் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தினை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டுவரும் அதேநேரம் வடக்கில் வவுனியா மாவட்டம் மாற்றப்பட்டுள்ள நிலையில் மன்னார், முல்லைதீவு மாவட்டங்களை மாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

விசேடமாக கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் எல்லைப்பகுதிகளை கபளீகரம் செய்வதற்கான பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன. புதிய திட்டங்கள் மூலமாகவும் எல்லைப்பகுதிகளில் வாழும் தமிழர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றாத வகையில் அவர்களை இடம்பெயரச்செய்து அப்பகுதிகளை கபளீகரம் செய்யவும் மகாவலி திட்டங்கள், வனஇலாகா போன்ற திணைக்களங்கள் ஊடாகவும் தமிழர்களை வெளியேற்றி சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான முனைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லைப்பகுதிகள் நீண்டகாலமா கவே போரின் வடுக்களையும், முறையான அபிவிருத்தியின்மையையும் சுமந்து நிற்கும் பகுதிகளாகவே காணப்படுகின்றன. ஒரு நாட்டின் அல்லது மாகாணத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி என்பது அதன் எல்லைப்பகுதிகளின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது. எனவே, வடகிழக்கின் எல்லைப்பகுதிகளைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்துவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

வளங்கள் இருந்தும், முறையான திட்டமிடல் இல்லாததாலும் உதவிகள் இல்லாத காரணத்தினாலும் எல்லைப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பல்வேறு சிரமங்களையும் பல சவால்களையும் எதிர்கொள்கின்றனர்.



இதேபோன்று போக்குவரத்துச் சீர்கேடு, போதிய குடிநீர் வசதியின்மை மற்றும் மின்சாரக் குறைபாடுகள் என்பன செயற்கையாக ஏற்படுத்தப்படுகின்றன.முறையான திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் அவர்கள் நகரங்களை நோக்கி இடம்பெயரும் நிலை ஏற்படுவதுடன் சில வேளைகளில் தமது வாழ்விடங்களை விட்டு மக்கள் இடம்பெயரும் நிலையும் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் பாரியளவிலான தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான வளங்கள் காணப்படுகின்றன.குறிப்பாக மட்டக்களப்பின் மயிலத்தமடு, மாதவனைப்பகுதியில் கால்நடை வளர்ப்புகள் பிரதானமாக காணப்படுவதனால் அது தொடர்பிலான தொழிற்சாலைகளை அமைக்கும்போது எல்லைப்பகுதியை நோக்கி மக்கள் செல்லும் நிலைமை ஏற்படும் சந்தர்ப்பம் உருவாகும்.

உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக பாரியளவில் மக்களின் இருப்பினை பாதுகாக்கமுடியுமு;.பனை அபிவிருத்தி, கைவினைப் பொருட்கள், மற்றும் நன்னீர் உணவு பதப்படுத்துதல் போன்றவற்றை எல்லைப் பகுதிகளில் சிறு கைத்தொழில்களாக ஊக்குவிக்க வேண்டும். இதேபோன்று முக்கிய நகரங்களுடன் எல்லைக் கிராமங்களை இணைக்கும் வீதிகளைப் உள்ளூராட்சிமன்றங்களின் உதவியுடன் புனரமைத்து முதலீடுகளை ஈர்ப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும்.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் பெருமளவான எல்லைப்பகுதிகள் இயற்கை அழகுகளைக் கொண்ட பகுதியாகும். இயற்கை எழில் கொஞ்சும் எல்லைக் கிராமப்புறங்கள் மற்றும் வரலாற்று இடங்களை அடையாளம் கண்டு, கிராமியச் சுற்றுலாத்துறையை மேம்படுத்தலாம்.

எல்லைப்பகுதிகளின் பொருளாதாரப் பலம் என்பது வெறும் வாழ்வாதார உயர்வு மட்டுமல்ல. அது அப்பகுதி மக்களின் நிலப்பாதுகாப்பையும், கலாசார இருப்பையும் உறுதிப்படுத்தும் ஒரு பலத்த அரணாகும்.அதனை வழங்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழருக்கும் இருக்கின்றது.



வடகிழக்கின் எல்லைப்பகுதிகள் வெறும் வரைபடத்தின் எல்லைக்கோடுகள் மட்டுமல்ல் அவை மாகாணத்தின் பொருளாதார நுழைவாயில்கள். முறையான அரச திட்டமிடல், தனியார் முதலீடுகள் மற்றும் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு ஆகியவற்றின் ஊடாக இந்த எல்லைப்பகுதிகளைப் பொருளாதார ரீதியாக முன்னேற்ற முடியும். வறுமை ஒழிக்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் போதுதான் வடகிழக்கின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் நிலையான வளர்ச்சியை எட்ட முடியும்.
இந்த எல்லைப்பகுதிக் காணிகளைப் பாதுகாத்து, தமிழர்களின் தனித்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய தமிழ்ச் சமூகம் உடனடியாகவும் கூட்டுப் பொறுப்புடனும் இனம்சார்ந்த நலனுடனும் செயற்படமுன்வரவேண்டும்.

கைவிடப்பட்ட நிலையில் உள்ள எல்லைப்புறக் காணிகளை மீளப் பயன்படுத்துவதற்கு, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் முதலீடுகளை வழங்கி, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, விவசாயப் பண்ணைகளை அமைக்க உதவமுன்வரவேண்டும்.எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் நிலங்கள், அவற்றின் எல்லைகள், தற்போதைய நிலை போன்றவற்றை செய்மதி தொழில்நுட்பம் மற்றும் வரைபடங்கள் மூலம் டிஜிட்டல் மயப்படுத்தி அவற்றினை சர்வதேச நாடுகளில் உள்ள புலம்பெயர் உறவுகள் மற்றும் முதலீட்டாளர்களிடம் கொண்டுசெல்லவேண்டும்.

"நிலமே ஒரு தேசிய இனத்தின் இருப்பு." நிலத்தை இழப்பது என்பது வெறும் மண்ணை இழப்பது மட்டுமல்ல, நமது கலாசாரம், அரசியல் பலம் மற்றும் வரலாற்றை

தொடர்ச்சி: பக்கம் 09




விரிந்திருக்கின்ற இந்த உலக அரங்கிலே எல்லைகளற்ற கனவுகளும் அளவுகடந்த ஆசைகளும் பெருகி ஓடுகின்றன. இந்தக் கனவுகள், ஆசைகள் எல்லாம் மனிதர்களை காலநேர நியமங்களுக்கும் கருத்துப் புரட்சிக்கும் உயர்வுகளுக்கும் உன்னதங்களுக்கும் நன்மைகளுக்கும் நலன்களுக்கும் இட்டுச் செல்கிறதா என்றால் அது சற்று யோசிக்க வேண்டிய ஒன்றாகவே உள்ளது.



ஒவ்வொரு யுகமும் மனிதர்களை அடையாளப் படுத்துகிறதென்பது வெளிப்படையாகத் தெரிந்த விட யமே. ஒவ்வொரு நூற்றாண்டும் ஒவ்வொரு மனிதனை இந்த உலகத்தின் நாயகர்களாக காண்பித்துச் செல்கின்றன. அவ்வாறு காண்பிக்கப்பட்டவர்களில் சிவப்புச் சிந்தனைக்காரன் கார்ல் மார்க்ஸ், பாட்டுப் புலவன் , பாரதி, கவிக்கிழவி ஔவையார், எங்கள் இனத்தின் அடையாளமான மேதகு என, பலரைப் பட்டியலிட முடியும். இப்படி காண்பிக்கப்படும் மனிதர்கள் சமூகச்சிந்தனை, சமுதாய அக்கறை, அறிவு, ஆளுமை, தெளிவு, ஒற்றுமை, இப்படி நற்குணங்கள் பொருந்திய கனத்துக்குரியவர்களாகவே இருப்பார்கள். இது நாம் கண்கூடாக கண்டு கடக்கிற விடயமேயாகும்.

மனிதர்கள் மகத்துவமானவர்களாகிற இந்த வாழ்வியல் சூட்சுமத்தையே நானும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன், அது உங்களையும் என்னையும் இறுக்கிப் பிணைக்கிற ஒரு தத்துவார்த்த நிலையாகவே இருக்கும். அந்தப் பிணைப்பு உங்களுக்கும் எனக்கும் பல மனமாற்றங்களைத் தரவல்லது, இணைந்து பயணிப்பதன் அர்த்தத்தை உணர்த்தவல்லது. வாருங்கள் அது பற்றிப் பார்ப்போம்.

### உலகத்தின் அதிகாரப்போக்கு

மேற்கூறப்பட்ட மனிதர்கள் எல்லோரும் கூறிய விடயம் என்ன? இவர்களும் சாதாரண மனிதர்கள் தான். ஆனால் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை என்பது தனித்துவமானது. இன்பதுன்பங்களை அளவாகவும் அழகாகவும் ஏற்றுக் கொண்டு பயணித்தவர்கள். தங்களுடைய வாழ்க்கைக்கு அவர்கள் வகுத்துக்கொண்ட நீதிநெறியே அவர்களைத் தனித்து தெரியவும் உதாரண புருசர்களாக மிளிரவும் செய்தது.மிக முக்கியமாக மற்றவர்களுக்காக அவர்கள் சிந்தித்தார்கள்.

அது மட்டுமல்ல, வாழ்க்கை எனும் பெரும் பெட்டகத்தை ஒரு குறுகிய நிலையில் நின்று அல்லாது விரிந்த நேர்த்தியான பார்வையோடு நோக்கிச் செல்லும் உத்திகளையே இவர்கள் எங்களுக்குச் சொல்லியுள்ளனர். ஆனால் மனிதர்கள் அவ்வாறு நடந்து கொள்கின்றனரா என்றால் இல்லவே இல்லை.

இனமும் மொழியும் எங்களோடு பின்னிப் பிணைந்துள்ள இரகசியத்தையும் இவற்றுக்காக நாங்கள் பயணப்பட வேண்டிய கட்டாயத்தையும் பேதங்கள் அற்ற வாழ்க்கைக்கான தரும நெறியையும் அவர்கள் தான் எமக்கு



கூறியுள்ளனர். மனிதர்கள் மற்றவர்கள் மீது அக்கறை கொள்வதையும் அன்பு காட்டுவதையும் நடைமுறைப் பழக்கங்களையும் அறமாக வகுத்தது எமது இனமே.

எமது வாழ்க்கை நிலையை மட்டும் எடுத்து நோக்காது, உலகளவில் நோக்கினால், போரும் மனித ஓலமும்தான் அவனியில் மலிந்து போயிருக்கிறது. பட்டினிக் கொடுமையால் மண்ணை அள்ளி உண்ணுகிற அவலம் நேர்ந்திருக்கிறது. மனித இனம் அவதியுற்று வாழ்வும் சாவுமாக அல்லாடுகிற நிலைமை உருவாகியிருக்கிறது. இவை எல்லாம் எதனால் உண்டானது என்று சிந்தித்தால் ஒரு விடயம் தெளிவாகப் புலப்படும்.

மனிதர்கள் மீது மனிதர்கள் கொண்டிருக்கிற வெறுப்பு இத்தகைய நிலைமையை உருவாக்கியுள்ளது. தீக்கங்குகளால் சாமரம் வீசுகிற மனநிலையே இதுவாகும். இது மாற்றப்பட வேண்டும், இல்லையேல் எரிதழலின் சிறகுகளில் சிறு குருவிகள் சாம்பலாகிவிடும் என்பதே நிதர்சனம்.



### வாழ்க்கையின் ஆழ்நிலை

வாழ்க்கை உண்மையில் அழகானதும் அமைதியானதுமே ஆகும். அதன் வேர்களும் கிளைகளும் பூக்களும் காய்களும் கனிகளும் இரசனைக்கு உரியவையே. மானுடர்கள் தம்மை மட்டுமல்லாது சக மனிதர்களையும் ஏனைய உயிரிகளையும் கூட நேசிக்க வேண்டும். அவற்றுக்கும் வாழ்க்கை உண்டென்பதை உணர வேண்டும். அடக்கியாளுவதும் அடிமைப் படுத்துவதும் அக தர்மமற்ற செயல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களுடைய இனம், தனி உரிமைக்காக ஓர்மத்துடன் எழுந்து நின்ற போது, அதன் நகர்வுகள் சிலரால் வளர்க்கப்பட்டதுடன் பலரால் சரிக்கப்பட்டது. ஒரு கடற்கரையின் ஓரத்திலே அபலைகளாக, நிர்வாணிகளாக, மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டவர்களாக நின்ற போது, உலகம் சற்றேனும் இரக்கம் காட்டவில்லை, ஒரு இனம் ஏன் தன்னுரிமை கேட்கிறது என்று சற்றும் சிந்திக்கவில்லை, விளைவு நாம் யாவரும் அறிந்ததே ஆகும். எங்களைப்போல பல இனங்கள் இன்றும் போராடுகின்றன, ஆனால் அவை எட்டவேண்டிய செவிகளுக்கு கேட்பதேயில்லை.

கோபிகை



### அகத்திரட்சி

அகத்திரட்சி என்பது சுய உணர்திறனுடன் சரியாகவும் நியாய வழியிலும் உண்டாகும் போது, மனித சமூகம் ஒரு மகிழ்ச்சியைப் பெறும். அந்த மகிழ்ச்சியானது, , மாற்று உலகம் ஒன்றைக் கையளிக்கும். இது எப்போது சாத்தியமாகும் என்பது விடை தெரியாத ஒரு வினாவாகும்.

அன்பு, ஒற்றுமை, என்பவற்றை முன்னிறுத்தி, அறவழியில் உலகமும் உலக மனிநர்களும் சிந்திப்பார்க



ளேயானால் தேசம் விடிவைக்காணும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல, வெளிப்படையாகத் தெரிந்த விடயமாகும்.

**நல்லதொரு உலகினைக்காண நாமும்
இயன்றவரை பயணிப்போம்....**

• • •

### புலம்பெயர்மக்கள் ... தொடர்ச்சி...

இழப்பதாகும். எனவே, எல்லைப்பகுதிக் காணிகளைப் பாதுகாக்க தமிழ் மக்கள் விழிப்புணர்வுடனும், சட்ட அறிவுடனும், பொருளாதார ரீதியாக நிலங்களைப் பயன்படுத்தும் உத்தியுடனும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.இதனை எதிர்காலத்தில் புலம்பெயர் உறவுகளும் இங்குள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் தமிழ் தேசிய அரசியல் சக்திகளும் இணைந்து முன்னெடுக்கமுன்வரவேண்டும்.

• • •




இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வரலாற்றில் மலையகத் தமிழ் மக்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளனர். நாட்டின் தேயிலை, இறப்பர் மற்றும் கோப்பி பொருளாதாரத்தின் அடித்தளத்தை உருவாக்கிய சமூகமாக இருந்த போதிலும், அவர்கள் எதிர்கொண்ட வரலாற்றுச் சுரண்டல், குடியுரிமை மறுப்பு, சமூக புறக்கணிப்பு மற்றும் அபிவிருத்தி சமத்துவமின்மை ஆகியவை இன்றளவும் முற்றாக நீங்கவில்லை.



இந்தச் சமூகத்தின் மனித உரிமைகளைப் பாது காக்கவும் மேம்படுத்தவும் ஒரு விரிவான தேசியக் கொள்கை அவசியமாக இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற தேசிய கலந்து ரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள், மலையக மக்களின் பிரச்சினைகள் வெறும் அபிவிருத்தி குறைபாடு கள் அல்ல, அவை அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியுடன் நேரடியாக தொடர்புடையவை என்பதைக் காட்டுகின்றன.

மலையகத் தமிழ் சமூகத்தின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் முறையானதொரு தேசிய கொள்கை கட்டமைப்பை உரு வாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அண்மையில் விசேட தேசிய கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது. கொழும்பில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், மலையக மக்களின் தற்போதைய வாழ்வாதார, சமூக சவால்கள் குறித்து ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறியும் களப்பணி ஆய்வுகளின் விரிவான அறிக்கை மற்றும் அதற்கான பரிந்துரைகள் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டன.



இந்த கலந்துரையாடலின் பிரதான அம்சமாக, மலையகத் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆணைக்குழுவின் சார்பில் விரிவான களப்பணி ஆய்வுகளை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களான சட்டத்தரணி பாலசந்திரன் கௌதமன் மற்றும் எஸ். பிரபாகரன் ஆகியோரால் விசேட விளக்கக்காட்சியொன்று முன்வைக்கப்பட்டது. கல்வி, தொழிலாளர் உரிமைகள், வறுமை ஒழிப்பு, மொழி உரிமைகள் மற்றும் அரச சேவைகள் ஆகிய ஐந்து பிரதான துறைகளை உள்ளடக்கி அவர்களால் இதன்போது பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

மேலும் இதன் போது நிலம் மற்றும் 'வீட்டுரிமை - மூலோபாயக் கொள்கை தலையீடுகள் மற்றும் அமுலாக்க நடவடிக்கைகள்' மற்றும் 'அரசு சேவைகள், சுகாதாரம் மற்றும் பொருளாதார நல்வாழ்வுக்கான அணுகலை வலுப்படுத்துவதற்கான கொள்கை தலையீடுகள்' ஆகிய தலைப்புக்களின் கீழான கலந்துரையாடல் அமர்வு ஆணைக் குழுவின் ஆணையாளர்களான நிமால் புஞ்சிஹேவா மற்றும் கலாநிதி ஜெஹான் குணதிலக்க ஆகியோரின் நெறியாழ்கையில் இடம்பெற்றது.

இதேபோன்று 'தொழிலாளர் உரிமைகள் மற்றும் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான கொள்கை மட்ட தலையீடுகள்' மற்றும் 'பெருந்தோட்ட சமூகங்களில் தரமான மற்றும் சமத்துவமான கல்வியை மேம்படுத்தல்: கொள்கை முன்னுரிமைகள் மற்றும் தலையீடுகள்' என்ற தலைப்புக்களிலான கலந்துரையாடல் அமர்வு ஆணைக்குழுவின் ஏனைய ஆணையாளர்களான பேராசிரியர் பர்சானா ஹனீபா மற்றும் பேராசிரியர் டி. தனராஜ் ஆகியோரின் நெறியாள்கையில் நடைபெற்றது.



கலந்துரையாடல்களின் போது அதில் கலந்து கொண்ட ஏனைய கல்வியியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், முன்னாள் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்டோரின் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன. இந்த அடிப்படையில், மலையகத் தமிழ் சமூகத்தின் நீண்டகால கவலைகளையும் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்வதற்கு ஒரு விரிவான, உறுதியான மற்றும் நிலையான தேசியக் கொள்கை கட்டமைப்பு அவசரமாக தேவைப்படுவ தாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, மனித உரிமைகளை அடிப்படை யாகக் கொண்ட முறையான கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர், நீதியர சர் எல். டி. பி. தெஹிதெனிய உத்தியோகபூர்வமாக அறி வித்துள்ளார். குறித்த அமர்வில் உரையாற்றிய ஆணைக் குழுவின் தலைவர், "பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்ட மலையக மக்கள், தங்களது கடின உழைப் பால் இலங்கையின் பொருளா தாரத்தின் முதுகெலும்பாக மாறினர்.

சுதந்திரத்தின் பின்னர் குடியுரிமையற்றவர்களாக் கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட இச்சமூகம், பின்னர் கொண்டு வரப்பட்ட சட்ட மூலங் கள் ஊடாக குடிமக்களாக அங் கீகரிக்கப்பட்டமை அவர்களின் உரிமைகளை மீட்டெடுப் பதற்கான முக்கிய படியாகும். எனினும், கல்வி மற்றும்

மருதன் ராம்

சுகாதாரத் துறைகள் அரசமயமாக்கப்பட்டதன் மூலம் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், மலையகத் தமிழ் சமூகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர் இன்றும் தொடர்ச்சியான ஓரங்கட்டலையும் நீடித்த சமத்துவ மின்மையையும் எதிர்கொண்டு வருகின்றனர்" என்று தெரிவித்தார். "பெருந்தோட்ட சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான நிலையான, ஒத்திசைவான மற்றும் நீண்டகால கொள்கைகள் அரசாங்கத்திடம் இல்லாமையே பிரதான கவலையாகும். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் கொண்டுவந்த தற்காலிகத் திட்டங்கள் துண்டு துண்டானவையாக இருந்ததால், கட்டமைப்பு ரீதி யான சவால்களுக்கு அவை போதுமான தீர்வை வழங்க வில்லை. இதன் காரணமாக பிரச்சினைகள் தலைமுறை தலைமுறையாக தொடர்கின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.



தொடர்ந்து உரையாற்றுகையில், நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஆணைக்குழு மேற் கொண்ட உண்மை கண்டறியும் களப்பணிகளின் மூலம், இவை வெறும் அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் அல்ல, மாறாகமனிதஉரிமைகள்மற்றும்அடிப்படைசமத்துவம்சார்ந்த முக்கியப் பிரச்சினைகள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த தற்காலிக அணுகுமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, மலையக மக்களின் உரிமைகளை உறுதி செய்ய 5 பிரதான துறைகளில் அரசாங்கம் நீண்டகால தேசியக் கொள்கைகளை வகுக்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கவுள்ளது. அதற்கமைய நிலம் மற்றும் வீட்டுரிமை, தொழிலாளர் உரிமைகளும் வேலை நிலைமைகளும், அரசாங்க சேவைகளுக்கான அணுகல், கல்வி மற்றும் மனித மேம்பாடு, பொருளாதார, சமூக நல்வாழ்வு ஆகிய துறைகளில் அம்மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இக்கொள்கைகள் ஒரு தற்காலிகப் பதிலாக இருக் கக் கூடாது. மலையகத் தமிழ் சமூகம் மற்றும் தொடர்புடைய தரப்பினருடன் அர்த்தமுள்ள கலந்தாலோசனைகள் மூலம் உருவாக்கப்படும் நீண்டகால தேசிய அர்ப் பணிப்பாக இது அமைய வேண்டும். அரசாங்க நிறுவனங்கள், உள்ளூர் அதிகாரசபைகள், பிராந்திய தோட்ட நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து செயல்படுவதன் மூலமே இதற்கான நிலையான தீர்வுகளை எட்ட முடியும். நாட்டின் அரசியலமைப்பு உத் தரவாதங்களுக்கு அமைய மலையக மக்களின் வாழ்வில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ந்து பாடுபடும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், நீதியரசர் எல். டி. பி. தெஹிதெனிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 16



# மிகப் பெரும் போருக்கான மையப்புள்ளியாக ஹோர்மூஸ் நீரிணை

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஹார்முஸ் நீரிணை "முழுமையாகத் திறந்திருக்கிறது" என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப்பதி விட்ட சில நாட்களிலேயே, பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்வதாகக் கூறப்பட்ட ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தபோதிலும், சிங்கப்பூர் கொடியுடன் சென்ற சரக்குக் கப்பல் ஒன்றை ஈரான் புரட்சிகரப் படை (IRGC) தாக்கியுள்ளது.




தாக்குதலுக்குள்ளான அந்தக் கப்பலின் பெயர் 'எவர் லவ்லி' (Ever Lovely); இதில் கப்பலின் கட்டுப்பாட்டு அறை (bridge) சேதமடைந்தாலும், யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

நிலைமை சீராக இருப்பதாக ட்றம்ப் பகிரங்கமாக அறிவித்துக்கொண்டிருக்கும் வேளையிலேயே ஈரான் இத்தாக்குதலை நடத்தியுள்ளது; இப்போது அமெரிக்க அதிகாரிகள் இதனை "அந்த ஒப்பந்தத்தின் உறுதித்தன்மைக்கான ஒரு ஆரம்பகட்டச் சோதனை" என்று விவரித்து வருகின்றனர்.

ஈரான் அமெரிக்க போரின் அமெரிக்காவின் தோல்வியை தீர்மானித்த காரணிகளில் ஹார்மூஸ் நீரிணை முக்கியமானது. உலகின் பொருளாதாரத்தில் அது ஏற்படுத்திய பாதிப்பும், அதனை மீண்டும் திறக்க முடியாத அமெரிக்காவின் பலவீனமும் போரை முடிவுக்கு கொண்டு வந்திருந்தது.

அண்மையில் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்களை தொடர்ந்து இந்த நீரிணை 60 நாட்களுக்கு திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. MarineTraffic தரவுகளின்படி, ஜூன் 24 அன்று ஹார்முஸ் நீரிணை வழியாகச் சென்ற கப்பல்களின் எண்ணிக்கை 70-ஆக இருந்த நிலையில், அங்கு போக்குவரத்து இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்தது.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் ஓமன் கப்பல் வழித்தடத்தின் பயன்பாடு அதிகரித்தது ஆகியவை இந்த உயர்வுக்குக் காரணமாகும்.




'Kpler' தரவுகளின்படி, 19 மற்றும் 21-ஆம் தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சுமார் 70 கப்பல்கள் அந்த நீரிணையை (strait) கடந்துள்ளன. இதில் 40 சதவீத கப்பல்கள் கடந்த 24 மணி நேரத்தில் சென்றவை என்பதையும், அவை ஈரானுக்குக் கட்டணம் (toll) செலுத்தியிருந்தன. அமைதி குறித்த இந்த ஒப்பந்தத்தில் (letter of intent) உள்ள அனைத்தும் விசித்திரமாகத் தோன்றினாலும், இது படிப்படியாகத் தனது நோக்கங்களை நிறைவேற்றுகிறது; அவற்றில் முக்கியமானது வளைகுடா நாடுகளின் பொருளாதாரங்களுக்குச் சற்று நிம்மதி அளிப்பதாகும்.

சவூதி அரேபியாவைத் தவிர மற்ற GCC நாடுகள் சுமார் 3 மாதங்களாகக் கடல்வழி ஏற்றுமதியை மேற்கொள்ளவில்லை. இது உலகப் பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கக்கூடிய, நீடிக்க முடியாத ஒரு சூழலாக இருந்தது.



இந்தக் கட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், அமெரிக்கா வளைகுடா நாடுகளின் பொருளாதாரங்களுக்கும், உலகளாவிய விநியோகச் சங்கிலிக்கும் ஒருவித நிம்மதியை அளித்துள்ளது.

ஈரான் 60 நாட்களுக்கு உலகளவில் ஏற்றுமதி செய்ய அனுமதி பெற்றுள்ளது; இது உலகளாவிய இருப்புக்களை (reserves) மீட்டெடுப்பதில் மேலும் உதவும். சந்தைகளுக்கும் GCC நாடுகளுக்கும் நிவாரணம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த உத்திசார் கட்டத்தின் மற்றொரு அம்சம் இதுவாகும்.

இது சிதைந்து கொண்டிருந்த (gangrening) பகுதிகளில் இரத்த ஓட்டத்தை மீண்டும் சீராக்கும் ஒரு நடவடிக்கையாகும். ஈரானைப் பொறுத்தவரை எதுவும் மாறவில்லை; விரைவில் நிலைமை பழைய நிலைக்குத் திரும்பிவிடும். ஏனெனில், ஆயுதமேந்திய குழுக்களுக்கான (militias) ஆதரவு, ஏவுகணை விவகாரம் அல்லது வளைகுடாப் பகுதியில் செலுத்தப்படும் கட்டணம் ஆகியவற்றில் எந்தத் தளர்வும் இல்லை. IAEA ஆய்வுகள் மீண்டும் நடைபெறலாம் - இதை டிரம்ப்பின் வெற்றியாகக் கருதலாம் - ஆனால் இஸ்ரேல் இதனை நிராகரித்துள்ளது.



கட்டணம் (toll) தொடர்பான விவகாரம் முன்பு இல்லாத ஒரு புதிய சிக்கல்; இது இப்போது GCC நாடுகளின் மீது கூடுதல் செலவுச் சுமையை ஏற்றுகிறது. முடக்கப்பட்ட ஈரானிய நிதியை விடுவிப்பது மற்றொரு மோதல் புள்ளியாக உள்ளது; வெனிசுலா பாணியிலான பேச்சில், அந்த ஈரானிய நிதி அமெரிக்க விவசாயிகளுக்குச் செல்லும் என்று ஜே.டி. வான்ஸ் (JD Vance) கூறியுள்ளார். ஆனால் ஈரான் அதனை மறுத்துள்ளது.




போரின்போது ஈரான் மிகவும் திறமையான ஒரு வியூகவாதியாகச் செயல்பட்டது. இருப்பினும், போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து, பென்டகன் வியூகவாதிகளால் திட்டமிடப்பட்ட தொடர்ச்சியான நிகழ்வுகளில் ஈரான் சிக்கிக்கொண்டுள்ளது; இந்த நிகழ்வுகள் குறித்து ஒரு தெளிவான மற்றும் உறுதியான நிலைப்பாட்டை முன்நகர்த்த முயன்று வருகின்றது.

உண்மையான அமைதி ஒப்பந்தமோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தமோ எதுவும் இல்லை. தற்போதுள்ள நிலை என்னவென்றால், போரைத் தொடர்வது நல்லதல்ல என்பதையும், படைகளை மீண்டும் ஒருங்கிணைக்க இரு தரப்பினருக்கும் நேரம் தேவை என்பதையும் இரு தரப்பும் ஒப்புக்கொண்டிருப்பது மட்டுமே.

ஈரானைப் பொறுத்தவரை அமைதி என்பது ஒரு மோசமான முடிவாக இருந்திருக்கலாம்; ஆனால், தெஹ்ரான் தனது சொந்த தளவாட மற்றும் இராணுவ ரீதியான கடுமையான சிக்கல்களை எதிர்கொண்டது. எந்தச் சூழலிலும் ஹார்முஸ் நீரிணை மீதான கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்று ஈரான் பெரிதும் நம்பியிருந்தது.

அந்த நீரிணையைத் திறந்து வைப்பதன் மூலம் தனது போக்குவரத்துப் பாதைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஈரான் திட்டமிட்டது; ஏனெனில் அதன் சில பகுதிகளில் இன்னும் கண்ணிவெடிகள் உள்ளன. இருப்பினும், ஓமன் வழியாகச் செல்லும் மற்றொரு பாதை ஏற்கனவே உருவாக்கப்பட்டு, கப்பல்களால் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது நடைமுறையில் அந்த நீரிணை மீதான ஈரானின் கட்டுப்பாட்டை பலவீனமாக்கலாம். ஆனால் பென்டகனின் விளையாட்டு அதோடு முடிந்துவிடவில்லை. இன்று, இந்தப் புதிய பாதையைப் பயன்படுத்தும் ஒரு கப்பலை ஈரான் தாக்கியது; இது அமெரிக்காவின் திட்டப்படியே அமைந்தது: அதாவது ஈரானை ஒரு உலகளாவிய பயங்கரவாத சக்தியாகச் சித்தரிப்பதே அந்தத் திட்டம்.


போரின்போது, ஈரான் ஏன் செங்கடல் வழியான நீரிணையை மூடவில்லை? ஏனெனில் அந்தப் பகுதி போர்க்களமாக இருக்கவில்லை; மேலும் ஹூதி அமைப்பின் தாக்குதல்கள் உலகளாவிய விநியோகப் பாதைகளுக்கு எதிரான பயங்கரவாதச் செயலாக ஐரோப்பா முழுவதும் கருதப்பட்டிருக்கும். இதை ஈரான் வேண்டுமென்றே தவிர்க்க விரும்பியது. அத்தகைய நடவடிக்கை ட்ரம்பின் திட்டத்தில் கூடுதல் நேட்டோ (NATO) உறுப்பு நாடுகளை நிச்சயம்

**தொடர்ச்சி: பக்கம் 14**




தமிழில்: **ஆர்தீகன்**

கெய்ர் ஸ்டார்மரின் பிரதமர்பதவிஅதிகாரப்பூர்வமாக முடிவுக்கு வந்துவிட்டது. வார இறுதியில் இது மேலும் தெளிவாகத் தெரிந்தது, குறிப்பாக டிரம்ப் சரியான நேரத்தில் வெளியிட்ட ‘ட்ரூத் சோஷியல்’ அறிக்கை இதற்கு ஒரு சான்றாகும். நம்பர் 10-ன் தலைமைப் பொறுப்பை ஏற்று ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தனது அரசியல் இருப்பு குறித்த பல நாட்கள் நீடித்த தீவிரமான, மூடிய கதவுகளுக்குப் பின்னரான ஊகங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட கட்சிக்குள்ளான கலகத்திற்குப் பணிந்து, பிரிட்டிஷ் பிரதமர் தனது பதவியைத் துறந்துள்ளார்.




திங்கட்கிழமை(22) காலை டவுனிங் தெருவுக்கு வெளியே உள்ள சொற்பொழிவு மேடைக்கு வந்த, வெளிப் படையாகவே தோல்வியுற்றவராகக் காணப்பட்ட ஸ்டார்மர், பத்திரிகையாளர்களிடம் தவிர்க்க முடியாத தீர்ப்பை வழங்கினார். “நான் தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்வேன்,” என்று ஸ்டார்மர் அறிவித்தார்.

இவ்வாறு, கெய்ர் ஸ்டார்மரின் குறுகிய, பேரழிவு மிக்க ஆட்சி முடிவுக்கு வருகிறது. தொழில்நுட்ப ஆட்சியின் அதீத எச்சரிக்கை உணர்வால் முடங்கிப் போனதன் ஏமாற்றத்திற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிரான சோர்வு அலையில் சவாரி செய்து ஆட்சிக்கு வந்த அவர், தான் கிளப்பிய எதிர்பார்ப்புகளுக்கும், இன்னும் திசை தெரியாமல் தத்த ளிக்கும் ஒரு நாட்டின் யதார்த்தத்திற்கும் இடையே கடக்க முடியாத ஒரு பெரும் பிளவை விரைவாக உருவாக்கினார்:




புத்துயிர் பெறத் தவறிய பொருளாதாரம், பல வீனமான வளர்ச்சி, கட்டுக்கடங்காத பணவீக்கம், மெல்ல மெல்லப் பரவும் வேலையின்மை, மற்றும் பொதுமக்களின் கடன் சுமையை விழுங்கும் வட்டி செலுத்துதல்கள்.

பங்களிப்பு உயர்வுகள், ஓய்வூதியதாரர்களுக்கான குளிர்கால எரிபொருள் கொடுப்பனவுக் குறைப்புகள், சலு கைகள் மீதான ஊழல்கள், மற்றும் பண்ணைகள் மீதான வரி உயர்வுகள் ஆகியவை, தேசியப் புத்துணர்ச்சியின் பத்தாண்டு என்பது ஒரு வெற்று முழக்கம் என்பதைப் பொதுமக்களின் கருத்துக்கு முழுமையாக உணர்த்திவிட்டன. குடியேற்றம் கட்டுப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, தற்காலிகப் படகுகள் இடைவிடாது வந்துகொண்டே இருக்கின்றன. இது மக்கள் கோபத்தைத் தூண்டி, ‘ரிஃபார்ம் யுகே’ கட்சியின் எழுச்சிக்கு வழிவகுத்துள்ளது. அதே நேரத்தில், தேசிய சுகாதார சேவையிலிருந்து தொடங்கி, பொதுச் சேவைகள் முடங்கியே இருக்கின்றன. மேலும், உள்ளாட்சித் தேர்தல்கள் தொழிலாளர் கட்சிக்கு ஒரு வரலாற்றுப் பேரழிவாக மாறியுள்ளன.



முடிவெடுக்கத் தெரியாதவராகவும், மசோதாக்கள், வீட்டுவசதி, குண்டும் குழியுமான சாலைகள் போன்ற அன் றாடக் கவலைகளிலிருந்து விலகியவராகவும் கருதப்படும் ஸ்டார்மர், தனது நிலைப்பாட்டில் பல்டி அடித்து, உறுதியான முடிவுகளுக்காக ஏங்கும் ஒரு தேசத்தின் நம்பிக்கையை குறுகிய காலத்தில் வீணடிக்கிறார்.

சர்வதேச அரங்கில், குறிப்பாக உக்ரைன் விவகாரத் தில், அவரது நடவடிக்கைகள், அவரது சகாக்களான மக் ரோன், மெர்ஸ் மற்றும் வான் டெர் லேயன் ஆகியோரின் அதே கூட்டுச் சராசரித்தனம் மற்றும் போர்க்குணத்துடன் பொருந்துகின்றன: இது ஒரு விறைப்பான அட்லாண்டிச நிலைப்பாடாகும். இது இராணுவ ஆதரவு மற்றும் முடி வற்ற தடைகள் மூலம் மோதலுக்குத் தீனி போடுவதாக அமைந்துள்ளது. இதன் விளைவாக, ஐரோப்பா முழுவதற்கும் பொருளாதார மற்றும் எரிசக்தி இழப்பு ஏற்பட்டுள்ளது.



அதிகாரச் சமநிலையைக் கருத்தில் கொள்ளும் ஒரு யதார்த்தமான அமைதியை நோக்கிப் பணியாற்று வதற்குப் பதிலாக, இந்தத் தலைவர்கள் ஒரு தெளிவான மூலோபாயப் பார்வைக்கு மேலாகக் கொள்கை ரீதியான ஒற்றுமைக்கு ஆதரவளித்து, தாங்க முடியாத மனித மற்றும் நிதிச் செலவுகளை ஏற்படுத்திய ஒரு தேய்வுப் போரை நீட்டித்துள்ளனர்.

கெய்ர் ஸ்டார்மருக்குப் பதிலாக யார் பதவியேற்பார் என்பதற்கான போட்டி இப்போது தொடங்குகிறது. ஏற் கனவே விவாதத்தில் முன்னணியில் இருக்கும் பெயர்: இங்கிலாந்தின் “வடக்கு மன்னர்” என்று அழைக்கப்படும் ஆண்டி பர்ன்ஹாம். சில நாட்களுக்கு முன்பு வரை, பர்ன்ஹாம் கிரேட்டர் மான்செஸ்டரின் மேயராக மட்டுமே இருந்தார். பின்னர், சமீபத்திய பிரிட்டிஷ் அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடைத்தேர்தல்களில் ஒன்றில் வெற்றி பெற்று, வெஸ்ட்மின்ஸ்டரில் ஒரு இடத்தையும், தலைமைப் பதவிக்கான உண்மையான வாய்ப்பையும் பெற்றார்.

சித்தாந்த ரீதியாக, பர்ன்ஹாம் ஸ்டார்மரை விட இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டவர். அவர் தனது அரசியல் பார்வையை, பிராந்திய அதிகாரம் மற்றும் பொது உடைமையை மையமாகக் கொண்ட “வணிகத்திற்கு உகந்த சோசலிசம்” என்று வெளிப்படையாக விவரிக்கிறார். டவுனிங் தெருவின் சாவிகளைப் பெறுவார் என்று இப் போது பெரும்பாலானோர் எதிர்பார்க்கும் நபர் இவரே. வேட்புமனுக்கள் ஜூலை 9 அன்று தொடங்குகின்றன. அவருக்குப் பின் வருபவர் யார் என்பது செப்டம்பர் 1-ஆம் தேதிக்குள் நமக்குத் தெரியவரும், அல்லது அவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டால் ஜூலை மாத நடுப் பகுதியிலேயே தெரிந்துவிடும்.

**தொடர்ச்சி: பக்கம் 15**

## வட்டுக்கோட்டை 50 ... தொடர்ச்சி...

இலியாஸ் கல்முனை, ஆகிய நான்கு தொகுதிகளிலும் தமிழர் விடுதலை கூட்டணியால் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்னிறுத்தி நான்கு முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்டபோதும் நால்வருமே தோல்வியடைந்தனர் இதனால் முஸ்லிம் மக்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஏற்கவில்லை என்பது இதன்மூலம் நிருபணமானது.

அதற்கான காரணமும் தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் அ.அமிர்தலிங்கம் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இரண்டு தமிழர்களை ஒரே கொள்கையில் நிறுத்து முஸ்லிம் பிரதிநித்துவத்தை தட்டிப் பறிக்க எத்தனித்தார் என்ற குற்றச்சாட்டே முஸ்லிம்மக்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு ஆதரவு வழங்காமை என்பதே உண்மை.

இவ்வாறான வரலாற்று பின்னணி கொண்ட தீர்மானம் நிறைவேறிய 50, வது பொன்விழா கடந்த 2026, மே,14, அன்றாகும் அதன் எழுச்சி மகாநாடுதான் கடந்த 2026, யூன்,20,ல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்த மகாநாட்டில் தற்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை பிரதிநித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மேனாள் பா.உ கஜேந்திரன், தமிழ்தேசிய பசுமை இயக்கம் ஐங்கரநேசன், தமிழ் மக்கள் கூட்டணி சட்டத்தரணி மணிவண்ணன், உட்பட சில கட்சி உறுப்பினர்கள் சமூகம் கொடுத்திருந்தனர் ஆனால் தமிழ்தேசிய கட்சிகளாக தம்மை அடையாளப்படுத்தம் பல கட்சிகள் வடக்கு கிழக்கில் இருந்து கடந்த 2024, நவம்பர்,14, ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 10, தமிழ்தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகி இருந்தனர் அவர்களில் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே சமூகம் கொடுத்திருந்தார் ஏனைய 09, பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த விழாவில் முகத்தை காட்டவில்லை புறக்கணித்தனர். காரணம் ஏன் என்பது வெளியில் கூறக்கூட முடியாமல் விழுங்கிக்கொண்டனர்.

தேர்தல் காலங்களில் உணர்சிபூர்வமாக வட்டுக்கோட்டை தீர்மானம், தந்தை செல்வா, தலைவர் மேதகு. ஆயுதப்போர், மாவீரர்கள், தியாகம், என வீரவசனம் பேசி தமிழ்மக்களிடம் வாக்குகளை பெற்ற இவர்கள் வட்டுக்கோட்டை 50, எழுச்சி விழாவை புறக்கணித்தன் மூலம் இனியும் தேர்ல்களில் என்ன முகத்துடன் மக்களிடம் வாக்கு கேட்டு பிரசாரம் செய்வார்கள் என்பதே மக்களுக்கு எழுந்துள்ள கேள்விகள்

கொள்கைக்காக வாக்களியுங்கள் என்றால் என்ன கொள்கை அபிவிருத்தி கொள்கை என்றால் தமிழ்த்தேசி கட்சிகளை ஏன் ஆதரிக்க வேண்டும் ஆளும் தரப்பை ஆதரிக்கலாம் அல்லவா? இதில் கவனிக்கவேண்டியது இலங்கை தமிழ் அரசுக்கட்சிதான் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் தாய்க்கட்சி அந்த கட்சியானது 1976, மே,14, ல் எடுத்த வட்டுக்கோட்டை தீர்மானத்தை மீளவும் 32, ஆண்டுகள் கடந்து 2008, ஏப்ரல் ,24, ல், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்சபை கூட்டத்தில் ஏகமனதாக ஒரு மீளவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டது அது யாதெனில் “ 1976, மே,14 திகதியிலிருந்து தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியாலும், இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும்,நடவடிக்கைகளையும் அங்கீகரிப்பதென இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் பொதுக்குழு 24.04.2008, ல், தீர்மானித்துள்ளது”

இப்படி அந்த தீர்மானம் அன்று நிறைவேற்றப்பட்டு அது இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி உபவிதி 17, ம் பிரிவில் (ஈ) பந்தியில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு தெளிவாக மீளவும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை 2008, ஏப்ரல்,24, பொதுச்சபை கூட்டத்தில் ஏற்றுக்கொண்ட இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி 2026, மே,14, ல் வட்டுக்கோட்டை 50, ஆண்டு நிகழ்வை புறக்கணித்தது ஏன்? அல்லது அது தொடர்பாக மௌனம் காத்தது ஏன்? இதற்கு அந்த கட்சியில் உள்ள எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது கட்சி பதில் பதவிகளை கொண்ட தலைமைகளோ இதுவரை பதில் கூறவில்லை.

இதில் சிந்திக்கவேண்டியது விடுதலைப்புலிகளின் மௌனத்திற்கு பின்னர் 2010,ஏப்ரல்,08, ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலுக்குப்பின்னர் 17, வருடங்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அதில் அங்கம் வகித்த கட்சிகளும் தடம்மாறி கொள்கைமாறி செல்வதையே இவர்களுடைய செயல்பாடுகள் நிரூபிக்கின்றன.

வட்டுக்கோட்டை 50, விழா ஏற்பாட்டாளர்கள் சகல கட்சிகளுக்கும், சகல தமிழ்தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்புகள் வழங்கப்பட்டதாக தெரிவித்தனர். அனேகமானவர்கள் விழாவுக்கு வருவதா கவே கூறியிருந்தனர் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர் ஏன் இதில் கலந்து கொள்ளவில்லை என்பதை மக்களுக்கு கூறும் கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியால் ரெலோ சார்பாக தெரிவான ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் இந்த நிகழ்வில் சமூகம் கொடுக்கவில்லை அதற்கான காரணமும் இதுவரை அறிய முடியவில்லை.

உண்மையில் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு கட்டுப்பட்டவர்களாகவே ஈழத்தமிழர் விடுதலைக்காக இலங்கையில் செயல்படும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் அனைத்தும். புலம் பெயர் நாடுகளில் செயல்படும் அமைப்புகளும் வெவ்வேறு பெயர்களில் தமது அரசியல் பணிகளை முன்னெடுக்கின்றனர் என்பதே உண்மை.

எந்த ஒரு தமிழ்த்தேசிய கட்சிகளும் தாம் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு உடன்படவில்லை அல்லது அதனை மீளப்பெற்றுவிட்டோம் என இதுவரை கூறவில்லை முடிந்தால் வெளிப்படையாக அப்படி அவர்களால் கூறமுடியுமா.?

• • •

## ஆளுநரின் வர்த்தமானி ... தொடர்ச்சி...

படுகொலைகளுக்கும் தற்போதைய ஜனாதிபதியும் அவரது அரசாங்கமுமே முழுமையாகப் பொறுப்பு கூற வேண்டும். அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் வேதநாயகம் அவர்களை ஒரு சிறந்த சேவகராக மக்கள் கருதினாலும், தற்போது அவர் ஜனாதிபதியின் முழுமையான முகவராக நியமிக்கப்பட்ட பின்னர், வெறும் அரசியல் கட்டளைகளுக்கு அடிபணிந்து செயற்படும் கூலியாகத் தள்ளப்பட்டுள்ளார் என்பது கசப்பான உண்மையாகும்.

இலங்கையின் அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தாலும், மாகாண சபைத் தேர்தல்கள் பல வருடங்களாக நடத்தப்படாமல் உள்ளூர் நிர்வாகங்கள் முடக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் மத்திய அரசாங்கம், மாகாண உள்ளூராட்சி அமைச்சருக்குரிய அதிகாரங்களை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநரின் கைகளில் கொடுத்து, அதன் மூலம் தமிழ் மக்களின் உள்ளூர் அரசியல் பிரதிநிதித்துவத்தைச் சிதைக்கப் பார்க்கிறது.

இது முன்னைய இனவாத அரசாங்கங்கள் வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒடுக்குவதற்குப் பயன்படுத்திய அதேதந்திரோபாயத்தின் தொடர்ச்சியாகவே பார்க்கப்பட வேண்டும்.

வட,கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களின் அரசியல் வலிமையையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் சிதைக்கும் நோக்குடன், ஒருபுறம் போதைப்பொருள் பரவலைக் கட்டுப்படுத்தாமல் மக்களை அழிக்கும் வேலைகளும், மறுபுறம் அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களைக் கேலிக்கூத்தாக்கும் வேலைகளும் மிகத் தந்திரமாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி ஆணையாளரின் வெறும் சுற்றறிக்கையை விமர்சித்ததற்காக ஒரு பிரதிநிதியை அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தே நீக்குவது என்பது உலக ஜனநாயக வரலாற்றிலேயே அதியுச்ச கேலிக்கூத்தான விடயமாகும். இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு மக்கள் தங்களின் பலத்த மக்கள் எதிர்ப்பை மிகவும் அமைதியான மற்றும் உறுதியான வழிகளில் பதிவு செய்யத் தொடங்கியுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபை உபதவிசாளர் கிஷோரின் பதவி பறிக்கப்பட்டு, அவரது உறுப்பினர் பதவியும் வறிதாக்கப்பட்ட சம்பவத்திற்கு நீதி கோரியும், ஆளுநரின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்தும் சாவகச்சேரி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து முழுமையான கடையடைப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்தத் தன்னிச்சையான வர்த்தமானி அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, 26-06-2026அன்று சாவகச்சேரி நகரின் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, போக்குவரத்துகள் முடக்கப்பட்டு, மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பும் வீரியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மக்கள் எழுச்சியானது, மக்களின் வாக்குரிமையையும் அவர்களின் அரசியல் ஆணையையும் எந்தவொரு தனிநபர் அதிகாரத்தாலும் அவ்வளவு எளிதாக நசுக்கிவிட முடியாது என்பதற்கான தெளிவான சான்றாகும்.

• • •

## சூப்பர் கம்ப்யூட்டிங்கில் ... தொடர்ச்சி...

சிக்கலான அறிவியல் பணிகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றன.

செவ்வாய்க்கிழமை(23) வெளியிடப்பட்ட தரவரிசைகளின்படி, ஷென்செனில் உள்ள தேசிய சூப்பர்கம்ப்யூட்டிங் மையத்தால் உருவாக்கப்பட்ட லைன்ஷைன், வினாடிக்கு கிட்டத்தட்ட 2.2 குவின்டில்லியன் (பில்லியன் பில்லியன்) கணக்கீடுகளைச் செய்யக் கூடியது. ஒரு முக்கிய அளவுகோலில், இது லாரன்ஸ் லிவர்மோர் தேசிய ஆய்வகத்தின் எல் கேபிடனை விட 20% அதிகமாகச் செயல்பட்டுள்ளது. அமெரிக்க அமைப்பு, நவம்பர் 2024 முதல், ஆண்டுக்கு இருமுறை வெளியாகும் TOP500 தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்திருந்தது.

பெரும்பாலான முன்னணி சூப்பர்கம்ப்யூட்டர்கள் பயன்படுத்தும் கிராபிக்ஸ் பிராசஸிங் யூனிட்டுகளுக்கு (GPU) பதிலாக, முற்றிலும் வழக்கமான சென்ட்ரல் பிராசஸிங் யூனிட்டுகளை (CPU) மட்டுமே நம்பியிருப்பதா லும் லைன்ஷைன் தனித்து நிற்கிறது.

“அமெரிக்காவின் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், தற்போதுள்ள தொழில்நுட்பத்திற்கு நிகரான - அல்லது அதைவிடச் சிறந்த - தனது சொந்தத் தொழில்நுட்பத்தை உருவாக்க சீனாவால் தன்னைத் தகவமைத்துக் கொள்ள முடியும்,” என்று டோங்கரா கூறினார்.

## மிகப்பெரும் போருக்கான ... தொடர்ச்சி...

இணைத்திருக்கும்.

ஈரானை ஒரு உறுதியான உலகளாவிய அச்சுறுத்தலாக நிலைநிறுத்துவது அமெரிக்காவுக்கு அவசியமாகிறது; ஏனெனில் இஸ்ரேலின் வாதங்களை மட்டுமே நம்பியிருப்பது பலனளிக்கவில்லை, மேலும் இஸ்ரேல் உலகில் நற்பெயரைக் கொண்டிருக்கவில்லை.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் பிற நட்பு நாடுகளின் படைகள் இப்பகுதியில் இன்னும் கணிசமான அளவில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், ஈரானைத் தனிமைப்படுத்தும் முழுத் திட்டமும் மீண்டும் கட்டமைக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நிலத்திலும் நீரிலும் ஊடுருவித் தாக்கும் படைகளைக்கூட மக்ரோன் களமிறக்கி, அவற்றை “அமைதிப் படைகள்” என்று அழைத்து வருகின்றார்.

அதாவது ஓமான் ஊடாக பாதை ஒன்றை அமைப்பதை அமெரிக்கா பலப்படுத்தி வருகையில் அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் மார்க்கோ ரூபியோ வளைகுடா நாடுகளுக்கு சென்று பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றார். அதிலும் குறிப்பாக ஓமானுக்கு சென்று ஈரானின் திட்டத்தில் சேரவேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளார். இந்த நிலையில் தான்ஓமன் அருகே சரக்குக் கப்பல் ஒன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீரிணையில் சிக்கியிருந்த ஆயிரக்கணக்கான மாலுமிகளை வெளியேற்றும் திட்டம் முடக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி மாதம் முதல் வளைகுடாப் பகுதியில் சிக்கியிருந்த நூற்றுக்கணக்கான கப்பல்களுக்காக, ஓமன் கடற்கரையோரம் ஒரு பாதுகாப்பான வழித்தடத்தை உருவாக் குவதில் சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) பல நாட்களாகப் பணியாற்றி வந்தது.

இந்நிலையில், சிங்கப்பூர் கொடியுடன் இயங்கும் ‘எவர் லவ்லி’ (Ever Lovely) என்ற கப்பல் ‘தாஹித்’ (Dahit) பகுதிக்கு அப்பால் 7.5 கடல் மைல் தொலைவில் தாக்கப்பட்டதையடுத்து, அந்தத் திட்டம் மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டது.

தாங்கள் அங்கீகரிக்காத எந்தவொரு வழித்தடத்தையும் பயன்படுத்த வேண்டாம் என்று கப்பல்களுக்கு ஈரான் அறிவுறுத்திய சில மணிநேரங்களிலேயே இத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்ததுஎன்பது ஹார்மூஸின் பிடியை கைப்பற்ற அமெரிக்காவும், அதனை தக்கவைக்க ஈரானும் மறைமுகமான மேதலில் ஈடுபட்டு வருவதையே காட்டுகின்றது. அமெரிக்காவின் போர் வெற்றிக்கு தடையாக இருப்பதும் அதுவே. எனவே இந்த மோதல்கள் மீண்டும் ஒரு பெரும் போராக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

• • •

## ஹெய்ட்டிக்கு ... தொடர்ச்சி...

இலங்கை இராணுவம் மற்றும் காவல்துறையினரின் சுய சான்றளிப்பிலேயே தங்கியிருக்கிறது என்றும், அமெரிக்கத் தூதரகத்தினால் ஓரளவு முன்னேற்றகரமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை போதுமானவை அல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2004 - 2007 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் அமைதிகாக்கும் படையினரால் குழந்தைகளுக்கு எதிராகப் பாலியல் சுரண்டல்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைகளில் கண்டறியப்பட்ட ஹெய்ட்டியில் இலங்கையின் கடந்தகால பதிவுகள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ள இவ்வமைப்புகள், தற்போது புதிய இராணுவப் பங்களிப்பை உள்வாங்குவதில் முனைப்புடன் ஈடுபட்டுவரும் சிரேஷ்ட அதிகாரிகள் குறித்தும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பங்களிப்புடனான ஒரு சுயாதீனமான மதிப்பீட்டு வழிமுறை நிறுவப்படும் வரை இந்த பணியை நிறுத்திவைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் குண்டர் ஒழிப்புப் படை என்பவற்றிடம் வலியுறுத்தியுள்ள அவ்வமைப்புக்கள், சித்திரவதைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் உபகுழுவின் கேள்விகளுக்கு பதிலளிக்குமாறும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

## மலையக மக்களுக்கான ... தொடர்ச்சி...

கூட்டுத்தாபனம், ஜனவஸம மற்றும் எல்கடுவ ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான தோட்டங்களில் வசிக்கும் மலையக மக்களுக்காக இந்த வீடுகள் வழங் கப்படவுள்ளன. ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கம் 28 இலட்சம் ரூபா வையும், இலங்கை அரசாங்கம் 04 இலட்சம் ரூபாவையும் ஒதுக்கியுள்ளன. வீட்டுத் திட்டத்தின் பணிகளை இந்த வருட இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய பிரபாத் சந்திரகீர்த்தி, வீடுகள் நிர்மாணிக்கப்பட முன்மொழியப்பட்டுள்ள காணிகளை விரைவாக விடுவிக்குமாறு அறிவுறுத்தினார்.

அத்துடன், பொருத்தமான காணிகளை அடையாளம் காண்பதற்குத் தேவையான அறிக்கைகளை வழங்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் அவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

## இந்தோ-பசுபிக் மூலோபாய ... தொடர்ச்சி...

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு, பின்னர் கழித்து ஒதுக்கப்பட்ட பழைய கப்பல்களையும் விமானங்களையும் புதுப்பித்து, இலங்கைக்குக் கொடையாக வழங்குவதன் மூலம் இலங்கைத் தரப்பைத் தன் கட்டுப்பாட்டில் அமெரிக்கா வைத்திருக்கிறது. முன்னர் பெல்-206, பெல்-212, பெல்-414 ஹெலிகொப்டர்கள், சி-130 ரக விமானங்கள் மற்றும் போரின் போது பீச் கிங் விமானம் போன்றவற்றை இலங்கைக்கு விற்பனை செய்த அமெரிக்கா, தற்போது கண்காணிப்பு விமானங்களையும் 10 ஹெலிகொப்டர்களையும் இலவசக் கொடைகளாக அள்ளி வழங்குகிறது.

இந்தக் கொடைகள் வெறும் மனிதாபிமான அடிப்படையிலானவை அல்ல, மாறாக அமெரிக்காவின் பசுபிக் மூலோபாயப் பாதுகாப்பை இலங்கையின் செலவில் உறுதிப்படுத்துவதற்கான உத்திகளாகும்.

கொழும்பு துறைமுகத்தில் கஜபாகு போர்க்கப்பலைப் பார்வையிட்ட போல் கபூர், இலங்கை கடற்படைக் கப்பல்களுக்கும் தரைத் தளங்களுக்கும் இடையில் தடையற்ற தொடர்பாடலைப் பேணக்கூடிய 4 மில்லியன் டொலர்கள் பெறுமதியான 'ஃப்ளீற் ப்ரோட்பான்ட்' (Fleet Broadband) அகலப்பட்டை செய்மதி தொடர்பு கருவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே அமெரிக்காவின் உதவியுடன் ராடார் கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ள நிலையில், தற்போதைய செய்மதித் தொடர்பாடல் கட்டமைப்பானது, இலங்கையின் முழுக் கடல் எல்லையையும் அமெரிக்காவின் வான்படை மற்றும் கடற்படை வலையமைப்புடன் பிணைக்கும் ஒரு மூலோபாயப் பொறியாகும்.

அமெரிக்காவின் இந்த அதீத அக்கறைக்கு முக்கிய காரணம், உலகின் பரபரப்பான சர்வதேச வர்த்தகக் கப்பல் பாதைகளின் மையத்தில் இலங்கை அமைந்திருப்பதேயாகும். இலங்கையின் கடல் பரப்பு பாதுகாப்பாக இருக்கும்போதுதான் சர்வதேச வர்த்தகம் தடையின்றி நடக்கும் என்றும், அது அமெரிக்காவிற்கு நேரடியாக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் போல் கபூர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மூலோபாய நலன்களுக்காகவே கொழும்பு துறைமுகத்தின் மீது அமெரிக்காவின் பார்வை தீவிரமாகப் பதிந்துள்ளது. கொழும்பு துறைமுகத்தில் சீனாவும் இந்தியாவும் தத்தமது முனையங்களைக் கொண்டுள்ள நிலையில், அமெரிக்காவும் அங்கு தனது செல்வாக்கை நிலைநாட்டத் தளமொன்றை எதிர்பார்க்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தைத் தனியார்மயமாக்க தற்போதைய அரசாங்கம் முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டும் பின்னணியில், அமெரிக்க அதிகாரிகளின் தொடர்ச்சியான துறைமுகக் களவிஜயங்கள் பெரும் சந்தேகங்களை எழுப்புகின்றன.

தற்போதைய இடதுசாரிப் பின்னணியைக் கொண்ட அரசாங்கத்தைப் பயன்படுத்தி, தங்களின் நீண்டகாலப் பொருளாதார மற்றும் பாதுகாப்பு இலக்குகளை அடைவது இலகுவானதென அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் கருதுகிறது.

இலங்கையைப் பெரிய நாடான அமெரிக்காவுடன் வர்த்தகச் சமநிலையில் ஒப்பிட முடியாதென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டிய நிலையிலும், அமெரிக்கா கொழும்பு துறைமுகத்தை ஒரு வர்த்தகக் கேந்திரமாக மாற்றித் தனது சொந்தப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே முனைகிறது.

எவ்வாறாயினும், அமெரிக்காவின் இத்தகைய இறுக்கமான பாதுகாப்புப் பிணைப்புக்குள்ளும், இராணுவக் கொடைகளுக்குள்ளும் இலங்கை சிக்கிக்கொள்வது, நாட்டின் நீண்டகால நடுநிலையான வெளியுறவுக் கொள்கைக்கும் அணிசேராக் கொள்கைக்கும் கடுமையான சவாலாக உருவெடுத்துள்ளது.

அண்மைய அமெரிக்க-ஈரான் பதற்றங்களின் போது இலங்கை இதனை அனுபவரீதியாக உணர்ந்திருந்தது. காலி துறைமுகத்திற்கு அப்பால் ஈரானின் 'ஐ.ஆர்.ஐ.எஸ் டேனா' போர்க்கப்பல் விபத்துக்குள்ளானபோது, அதன் மாலுமிகளை மீட்ட இலங்கை அரசாங்கம், சர்வதேசச் சட்டங்களின்படி நடுநிலையாகச் செயற்படுவதாகக் கூறினாலும், முற்றுமுழுதாக அமெரிக்காவின் வழிகாட்டலின்படியே அவர்களைத் தடுத்து வைத்து ஈரானுக்குத் திருப்பி அனுப்பியது.

இது இலங்கையின் பாரம்பரிய நட்பு நாடான ஈரானுக்குக்கடுமையானஅதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்கா மீண்டும் போரைத் தொடங்கினால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மாத்திரமின்றி, இந்தியப்பெருங்கடல், செங்கடல், அரபிக்கடல் என்று அனைத்துப் பகுதிகளுக்கும் அமெரிக்காவுக்கு எதிரான போரை விரிவுபடுத்துவோமென ஈரானிய உயர் தலைவர் எச்சரித்துள்ள சூழலில், அமெரிக்கா இலங்கையைத் தனது முன்களக் கண்காணிப்புத் தளமாக மாற்ற முயல்கிறது.

ஈரானுடன் போர் மூண்ட காலத்தில் அமெரிக்கப் போர் விமானங்கள் மத்தலவில் தரையிறங்க அனுமதி கோரியதை ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தியிருந்த நிலையில், தற்போதைய அமெரிக்க அதிகாரிகளின் கூட்டு வருகையானது, இலங்கையைத் தங்களின் தற்காப்புக் கேடயமாகத் தொடர்ந்து தக்கவைப்பதற்கான அழுத்தமாகவே பார்க்க முடிகிறது.

பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுடன் இடம்பெற்ற சந்திப்புகளில் இணையப் பாதுகாப்பு, கடல்சார் மற்றும் வான்வழி ஒத்துழைப்புகள் குறித்துப் பேசப்பட்ட அதேவேளை, காலியில் அமெரிக்காவின் மொன்டானா தேசிய காவற்படையின் பங்களிப்புடன் இலங்கை முப்படையினருக்கும் சிவில் அதிகாரிகளுக்கும் அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக, ஒரேயடியாகப் படைத்தளங்களை அமைக்காமலோ அல்லது உத்தியோகபூர்வ பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளாமலோ, கப்பல்கள், விமானங்கள், தொடர்பாடல் தொழில்நுட்பங்கள், கூட்டுப் பயிற்சிகள் மற்றும் இராஜதந்திரப் பயணங்கள் ஊடாக அமெரிக்கா இலங்கையைத் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறது.

நவீன போர்முறைமைகள் எல்லைகளுடன் நின்றுவிடுவதில்லை எனவும், மாறிவரும் நவீன போர்முறைகளின் தன்மை இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பை மறுவடிவமைக்கும் சமச்சீரற்ற சவால்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்தும் ஜெனரல் சினைடர் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பாதுகாப்புத்துறை தலைவர்களுடனும் மூலோபாய சிந்தனையாளர்களுடனும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்கா தனது சொந்தத் தற்காப்பிற்காக இலங்கையை ஒரு கேடயமாகப் பயன்படுத்த முற்படும் இச்சூழலில், இந்தியா, சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளுடன் சமநிலையான உறவைப் பேண வேண்டிய இலங்கை, அமெரிக்காவின் இந்த 'மூலோபாயப் பொறிக்குள்' இருந்து எவ்வாறு வெளியில் வரப்போகின்றது என்பது மில்லியன் டொலர் கேள்வி தான்.

• • •








## செம்மணி மனித புதை குழி ... தொடர்ச்சி...

தொடர்பில் தூதரகங்களுக்கும் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. டி.என்.ஏ பரிசோதனைக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும்.

தற்போது முன்னெடுக்கப்படும் அகழ்வாராய்ச்சி பணி களை நிறைவுபடுத்தாமல் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு செல்ல முடியாது என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"செம்மணி மனிதப் புதைகுழி இடத்துக்கு நான் கடந்த வாரம் நேரடியாக சென்றேன். இந்த பணிகள் மிகவும் விரிவானது மற்றும் உணர்வுபூர்வமானது என்பதை விளங்கிக்கொண்டேன்.

மக்கள் உண்மைக்காக காத்திருக்கிறார்கள். நாங்கள் உண்மையை நிச்சயம் வெளிப்படுத்துவோம். எவரையும் பாதுகாக்கவோ, உண்மையை மறைக்கவோ வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது" என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## 20,000 பாலஸ்தீனக்... தொடர்ச்சி...

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் கொல்லப்பட்டவர்களில் சுமார் 30% பேர் குழந்தைகள் என்றும், அவர்கள் மீதான தாக்குதல்கள் "தொடர்ச்சியான நடவடிக்கையாக" இருந்து வருவதாகவும் முரளிதர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும்போது, கூடாரங்களில் தங்கியிருக்கும்போது, உதவி வழங்கப்படும் இடங்களை அணுகும்போது அல்லது இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் இருக்கும்போது இஸ்ரேலிய துப்பாக்கிச் சுடும் வீரர்கள் (snipers) அல்லது ட்ரோன்களால் குழந்தைகள் சுடப்பட்ட சம்பவங்களையும் இந்த அறிக்கை பதிவு செய்துள்ளது.

காசாவில் இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள், அத்துடன் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் போர்க் குற்றங்கள் ஆகியவற்றை இஸ்ரேலிய அதிகாரிகளும் பாதுகாப்புப் படைகளும் தொடர்ந்து செய்து வருவதாக ஆணையம் முடிவு செய்துள்ளது.

## கெய்ர் ஸ்டார்மரின் ... தொடர்ச்சி...

ஸ்டார்மரின் வருகை ஒரு தற்செயலான நிகழ்வல்ல; மாறாக, சித்தாந்தப் பிடியிலிருந்து விடுபட இயலாத ஒரு போலி ஐரோப்பிய மேட்டுக்குடியினரின் அறிகுறியாகும். இது ஐக்கிய இராச்சியத்தையும் கண்டத்தையும் மேலும் பலவீனமாகவும், மேலும் பிளவுபட்டதாகவும், மேலும் வறுமையடைந்ததாகவும் ஆக்கியுள்ளது. பெரும் பெரும்பான்மை இருந்தபோதிலும், ஆரம்பத்தில் அவர் தூண்டிய சொற்ப உற்சாகத்தை மின்னல் வேகத்தில் வீணடித்த ஒரு பிரதமரை வரலாறு நினைவில் கொள்ளும்.

• • •

## தன்னாட்சிக்கு... தொடர்ச்சி...

ஊக்குவித்தல் ஆகியனவும் உள்ளூராட்சி நிர்வாகத்தின் முக்கிய அம்சங்களாகும். இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் சூழலை ஏற்படுத்துவதிலும் உள்ளூராட்சி சபைகள் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

### செயலுக்கு முதலிடம்

வடக்கு கிழக்கின் தனித்துவமான சமூக மற்றும் அரசியல் வரலாற்றைக் கருத்தில் கொள்ளும்போது, உள்ளூராட்சி என்பது வெறும் நிர்வாக அதிகாரம் மட்டுமல்ல, அது மக்களின் தன்னாட்சி ஆற்றலை வெளிப்படுத்தும் ஜனநாயக மேடையாகும். தமது சமூகத்தைத் தாமே திட்டமிட்டு நிர்வகிக்கும் திறனை உலகிற்கு எடுத்துக்காட்டும் வாய்ப்பாக இதைப் பயன்படுத்த வேண்டும். பொறுப்புணர்வும் வெளிப்படைத்தன்மையும் திறமையும் கொண்ட நிர்வாகத்தின் மூலம் மக்களின் நம்பிக்கையைப் பெறுவது அவசியமாகும்.




வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தின் அரசியல் அபிலாஷை என்பது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டது. அந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில், உள்ளூராட்சி நிறுவனங்கள் நல்லாட்சிக்கான முன்னுதாரணங்களாக விளங்க வேண்டும். அதிகாரம் கிடைக்கவில்லை என்பதைக் காரணமாகக் காட்டி செயலற்றிருப்பதற்குப் பதிலாக, கிடைத்துள்ள அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தி மக்கள் நலனை முன்னிறுத்தும் நிர்வாகத்தை உருவாக்க வேண்டும். அதுவே மக்களிடையேயும் சர்வதேச சமூகத்திடையேயும் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

உள்ளூராட்சி மன்றங்களில் மக்களின் பங்கேற்பு முக்கியமானதாகும். கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் கழகங்கள், தொழில்முறை அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து திட்டங்களை உருவாக்க வேண்டும். மக்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பங்கேற்பு ஜனநாயகமே நிலையான வளர்ச்சியை உருவாக்கும் என்பதை உலக சமூகம் பின்பற்றுகிறது.

### தன்னாட்சிக்கு உதாரணமாயிருத்தல்

இன்றைய உலகில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. வரி செலுத்துதல், அனுமதிப் பத்திரங்கள் பெறுதல், குறைகளைப் பதிவு செய்தல், திட்டங்கள் குறித்த தகவல்களை வெளியிடுதல் போன்ற சேவைகளை இணையவழி வழங்கும் முயற்சிகள் மக்களுக்கு எளிதான நிர்வாக அனுபவத்தை வழங்கும். அதேவேளை ஊழலைக் குறைத்து வெளிப்படைத்தன்மையையும் அதிகரிக்கும்.

வடக்கு கிழக்கின் வளர்ச்சி கொழும்பிலிருந்து மட்டுமே தீர்மானிக்கப்பட முடியாது. அந்த மண்ணின் தேவைகளை அறிந்த மக்களின் பிரதிநிதிகளே தமது பிரதேசத்தின் எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டும். அதற்கான முதன்மையான ஜனநாயகக் கட்டமைப்பே உள்ளூராட்சி அதிகார சபைகளாகும்.

எனவே, வடக்கு கிழக்கின் உள்ளூராட்சி சபைகள் வெறும் நிர்வாக அலுவலகங்களாக இல்லாமல், மக்கள் நலன், சமூக நீதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் நல்லாட்சியின் மையங்களாக உருவெடுக்க வேண்டும். வினைதிறனான மக்கள் சேவைகள், பொறுப்பான நிர்வாகம் மற்றும் வெளிப்படையான செயற்பாடுகள் மூலமாக அவை, போரால் அழிந்த வடக்கு கிழக்கின் மறுமலர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைக்க வேண்டும். அதுவே தமிழர் தேசத்தின் ஜனநாயக ஆற்றலையும் தன்னாட்சித் திறனையும் உலகின் முன் எடுத்துக்காட்டும் சிறந்த வழியாக அமையும்.

• • •

## மலையக மக்களின் ... தொடர்ச்சி...

மலையகத் தமிழ் மக்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக தலைமுறை தலைமுறையாக உழைத்த சமூகமாகும். நாட்டின் தேயிலைத் தொழிலின் பின்னணியில் அவர்களின் வியர்வையும் உழைப்பும் நிறைந்துள்ளது. இருந்தபோதிலும், நில உரிமையின்மை, வறுமை, கல்வி சமத்துவமின்மை, தொழிலாளர் சுரண்டல், சுகாதார வசதிகளின் பற்றாக்குறை மற்றும் அரச சேவைகளுக்கான குறைந்த அணுகல் போன்ற பல்வேறு சவால்களை அவர்கள் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியபடி, மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் ஒரு விரிவான, நிலையான மற்றும் மனித உரிமை அடிப்படையிலான தேசியக் கொள்கை கட்டமைப்பு அவசரத் தேவையாக உள்ளது. நிலம், வீடு, கல்வி, தொழிலாளர் உரிமைகள், சுகாதாரம், மொழி உரிமைகள் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகிய துறைகளில் நீண்டகால திட்டமிடலுடன் செயல்பட்டால் மட்டுமே மலையக மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். மலையக மக்களின் முன்னேற்றம் என்பது ஒரு சமூகத்தின் முன்னேற்றம் மட்டுமல்லாது அது இலங்கையின் ஜனநாயக வளர்ச்சி, சமூக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் அளவுகோலாகவும் அமைகிறது. ஆகவே, அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது வரலாற்று நீதியை நிலைநாட்டும் பணியாக மட்டுமல்லாமல், நாட்டின் எதிர்காலத்தை வலுப்படுத்தும் தேசியப் பொறுப்பாகவும் கருதப்பட வேண்டும்.

## மூன்றாவது நாடு ஐசி ... தொடர்ச்சி...

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, “மிகக் கடுமையான சர்வதேச குற்றங்களுக் குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படும் நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கூட்டு முயற்சியிலிருந்து விலகும் எந்தவொரு முடிவையும்” தாங்கள் வருத்தத்துடன் பார்ப்பதாக ICC கூறியது.

இந்த விலகல் நடவடிக்கை 12 மாதங்களுக்குப் பிறகு நடைமுறைக்கு வரும்; இதன் மூலம் ICC-யிலிருந்து வெளியேறும் மூன்றாவது நாடாக நைஜர் அமையும். ஆப்பிரிக்கர்களை மட்டுமே வேண்டுமென்றே குறிவைத்து வழக்குத் தொடர்வதாகக் குற்றம் சாட்டி, புருண்டி 2017 அக்டோபரில் ரோம் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியது. அதனைத் தொடர்ந்து 2018-ல் பிலிப்பைன்ஸ் வெளியேறியது; அக்கால அதிபர் ரோட்ரிகோ டுடெர்டே, ICC தனது நாட்டிற்கு எதிராக ஒரு “அரசியல் கருவியாக” பயன்படுத்தப்படுவதாகக் கூறினார். பாரிஸை மையமாகக் கொண்ட ‘சர்வதேச பிராங்கோஃபோன் நாடுகள் அமைப்பு’ (International Organization of Francophone Nations), கலாச்சார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் தனது அசல் நோக்கத்திலிருந்து விலகி, “அரசியல் கையாளுதலுக்கான” ஒரு சார்புடைய கருவியாக மாறிவிட்டதாகக் கூறி, 2025 மார்ச் மாதத்தில் புர்கினா பாசோ மற்றும் மாலி ஆகிய நாடுகள் அதிலிருந்து விலகின.

## பயங்கரவாதத் தடைச் சட்டம் ... தொடர்ச்சி...


அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் எழக்கூடிய பாதுகாப்புத் தேவைகள் குறித்தும் நாம் ஆராய்ந்துள்ளோம். இதற்கமைய, பாரிய குற்றக் கும்பல்கள் மற்றும் திட்டமிட்ட ஆள் கடத்தல், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட விபரீதமான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும், தடுப்பதற்காகவும் சர்வதேசத் தரத்துக்கு இணையான புதிய சட்டம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படும்.

நாம் கொண்டுவரவுள்ள இந்தப் புதிய சட்டமானது, மக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை முழுமையாக உறுதிப்படுத்தும் வகையிலேயே மிகத் துல்லியமாக வடிவமைக்கப்படும். இது எமது நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை நிச்சயம் பாதுகாக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது நாட்டின் சாதாரண மக்களை ஒடுக்குவதற்காகவோ, அவர்களது ஜனநாயகக் குரல்வளையை நசுக்குவதற்காகவோ இத்தகைய கடுமையான சட்டங்களை எமது அரசு ஒருபோதும் பயன்படுத்தியது கிடையாது, இனி பயன்படுத்தப் போவதுமில்லை.” – என்றார்.

NPP -யின் தேர்தல் வாக்குறுதிகள் முதன்மையான வாக்குறுதிகளில் ஒன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகும். ஆனால் இதுவரையில் அரசால் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட சட்டம் நீக்கப்படுவதாக கூறப்படுகின்ற போதும் அது நீக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

## திருகோணமலையில்
# மாணவர் ஓவியக் கண்காட்சி







இ. ஜோயல் – செல்வநாயகபுரம்

## ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்

அன்று திங்கள் காலை. அஜய் வெளிநாட்டு வாடிக்கையாளர் ஒருவருக்கு புதிய செயலியை காட்டி ஒப்புதல் பெற இருக்கும் முக்கியமான நாள். ஆனால் திடீரென அஜய்யின் செயலி வேலை ஆகவில்லை. அதை சரிசெய்யும் பொறுப்பு விக்ரமுடையது. ஆனால் விக்ரம் இன்னும் வரவில்லை. தொலைபேசியில் அழைத்துப் பார்த்தும், அவன் எடுக்கவில்லை.

இதனால் ஆத்திரம் தலைக்கேறிய அஜய், விசாரிக்காமல் நிறுவனத்தின் வாட்ஸ் அப் குழுவில் "விக்ரம் பொறுப்பற்றவன் என்றும் வேலையிற்கு தகுதி இல்லாதவன், இவனால் Project அழியப்போகிறது" என்று குறுஞ்செய்தி அனுப்பினான். சிறிது நேரத்தில் ,விக்ரம் பதற்றத்துடன் ஓடிவந்தான். கோபத்துடன் நின்ற அஜய், விக்ரமை மேலாளர் அறைக்கு அழைத்துச் சென்று புகார் செய்தான்.

பின்பு மேலாளர் அறையில் உண்மை வெளிவந்தது. விக்ரம், நேற்று நள்ளிரவு கணினியில் வைரஸ் தாக்கியதால் செயலியை தானே முடக்கி, விடிய விடிய கண்விழித்து புதிய பாதுகாப்பான குறியீட்டை தயாரித்திருந்தான். அதனால் நிறுவனத்திற்கு பெரிய நஷ்டம் வராமல் காப்பாற்றியிருந்தான்.

உண்மையை அறிந்த மேலாளர் அஜய்யைப் பார்த்து, "தலைவனுக்கு அழகு கோபம் அல்ல, நிதானம்" என்றார். தன் தவறை உணர்ந்த அஜய், விக்ரமிடம் மன்னிப்பு கேட்டான்.

ஆகவே இதிலிருந்து நாம் விளங்கி கொள்வது யாதெனில் கோபத்தில் எடுக்கும் முடிவுகள் தவறானதாக இருக்கலாம். அதனால் எதையும் பொறுமையாக விசாரித்து செயல்பட வேண்டும்.

**– மு. சந்தியா**
செல்வநாயகபுரம்

# தாயகமும் வாழ்வும்


சாவகச்சேரி நகரசபை
உபதவிசாளர்
ஞா.கிசோர் அவர்களை
பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு
எதிர்ப்புத் தெரிவித்தும் இதற்கு முறையான, நீதியான
தீர்வு கிடைக்க வலியுறுத்தியும்
முழு அடைப்பு
போராட்டமும்,
கவனயீர்ப்பும்.
26.06.2026



